உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு ,, ரூ. 5-0-0
R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹூ கார்த்திகை-மீ 3-உ (18—11—1934) | மலர் 13.

## துன்பக்கடலில் துயருறு விதவையர்.

(சுத்தமல்லி தோழர் அ. சிதம்பரநாதன்)

"தேயிலைத்தோட்டத்திலே" என்னும் மெட்டு.

பல்லவி

துன்பக்கடலினிலே ஆ!
துன்பக்கடலினிலே விதவைத்
தோகையர் மூழ்கித் துடிக்கின்றார் ஐயையோ!
(துன்ப)

சரணங்கள்

(1) இன்பவாழ் வைநினைந்து அனல்
இட்ட மெழுகு இளகுவ் தைப்போன்று
இந்நில மீதினிலே அந்தோ!
என்னசெய் வோமென்று ஏங்குகி றாரவர்
உன்னி இடர்களைய மார்க்கம்
ஒன்றையும் காணாது இன்றந்தப் பெண்மக்கள்
தம்மிட ரைத்தவிர்க்கும் வழி
தற்கொலை யேஎன்று சாகுகின் றாரந்தோ (துன்ப)

(2) வாழ்வை நினைப்பாரோ இந்த
வையங் கொடிதென்று வாய்விட் டலறிப்பின்
தாழ்வை நினைப்பாரோ அந்தோ!
தற்கொலை சொல்வதும் தக்கதன் றுஆக்கை
வாழ்க்கைத் துணைவனுக்கே என்று
வையத்தோர் கள்சொல்லச் செய்யும் முறைவிட்டுப்
பாழ்படச் செய்துவிட்டால் வரும்
பாவம் கொடிதன்றோ? எதுசெய் வோமென்று
(துன்ப)

(3) மொட்டைத் தலையுடனே கைம்பெண்
முத்துமுத் தாய்க்கண்ணீர் விட்டுக் குழைந்துமே
கட்டத் துணியுமின்றி நடுக்
காட்டி விடப்பட்ட நாட்டிளம் பாலர்போல்
பட்டினி யால்மாளுறார் இந்தப்
பாதகத் தைநீக்க யாதேனும் ஓர்வழி
நாட்டிற் கிடையாதோ? என்று
நைந்து உருகி நலிகிறார் ஐயையோ! (துன்ப)

(4) பெண்ணொன்று சொல்லிடிலோ துஷ்டப்
பேயு மிரங்குமென் றோதினார் முன்னவர்
கண்முன் விதவைப்பெண்கள் படும்
கஷ்டநிஷ்டூரத்தைக் கண்டிருப்போர்கள் தம்
உண்மையை என்னவென்போம் அவர்
ஓல மிடுங்குரல் ஊடுரு விக்காதில்
கிண்ணென்று தாக்கிடுதே இதைக்
கேட்கக்கேட் கநெஞ்சுள் ஊக்கம் குறையுதே (துன்)

(5) கண்க ளிரண்டிருந்தும் துயர்
காணுந் திறனற்றோ ரென்று நமையிந்த
மண்ணிலிகழாரோ? இளம்
மாதர்கள் சூழ்மணி நாடெனப் போற்றி நம்
பெண்கட் கழகுதரும் சிகை
போக்கிவிட் டுமுண்டம் ஆக்கிவைத் துக்கொண்டு
மாண்புறக் கூறுவதால் உண்மை
மங்கிடு மோ? மற்றோர் நம்பிக்கொள் வார்களோ
(துன்ப)

(6) அன்பு வழிந்தொழுகி எங்கும்
ஆனந்தம் பொங்குதென் றாகாய மட்டுக்கும்
இன்ப மழைபொழியக் கூறி
இங்குற்ற பெண்களுக் கின்ன லிழைக்கின்ற
துன்பத்தை மற்றவர்கள் கண்டு
தூஷித்து மேன்மை எசிடச் செய்யாரோ
இந்நாட்டுக் கைம்பெண் மக்கள் அழு
தேங்கி விடுங்கண்ணீர் என்று தான் நீங்குமோ?
(துன்ப)

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | லோகல்போர்டுஆக்ட்(சென்னை) | 2-0-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| மனித உற்பவம் | 0-8-0 | பெண்ணுரிமைக் கீதங்கள் | 0-1-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 | சமதர்மக் கீதங்கள் | 0-0-6 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 | | |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 | | |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

கௌரவ ஆசிரியர்:—

S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.

ஆசிரியர்:—

சி. நடராஜன், மாயவரம்.

பழய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0

தனிப்பிரதி விலை அணா ஒன்று.

விலாசம்:—

மானேஜர்,

"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—

வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.

தனிப்பிரதி விலை 6 பை.

விலாசம்:- மானேஜர்,

"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை

ஆசிரியர்:—

மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0

விலாசம்:—

மானேஜர்,

"நகர தூதன்"

உறையூர், திருச்சி.

நாகர் கோவிலிலிருந்து தோழர் பி. சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோரும் வெளிவருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0

6 மாதம் „ 2—0—0

3 மாதம் „ 1—4—0

மானேஜர், "தமிழன்" ஆபீஸ், கேப்ரோட், நாகர்கோவில்.

—0—

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0

வெளி நாடு ரூ. 5—0—0

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"

ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,

கோலார் தங்கவயல்

## விதவையர் விடுதலை முழக்கம்.

இது விதவைகள்படும் கொடுமைகளையும், அவர்களின் விடுதலைக்குரிய வழிகளையும் விளக்கும் இனிய வர்ன மெட்டுகளாலமையப்பெற்றது. $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்டில னுப்பப்படும். விலை அணா $\frac{1}{2}$.

விலாசம்:—க. அ. புன்னைமுத்து கல்லூரணி, அருப்புக்கோட்டை வழி

## ஏஜண்டுகள் தேவை.

நமது "பகுத்தறிவு" வாரப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு

1. பொனமலை
2. சாக்கோட்டை
3. சிவகங்கை
4. சென்னை
5. கேலார் தங்கவயல்.

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு

# மதமொழிக்கும் உலகப்புரட்சி.

### ஜோசப் மெக்காபி எழுதியதின் மொழிபெயர்ப்பு.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பஞ்சாங்கங்களிலும், மக்களின் முன்னேற்றத்திற்குரிய பற்பல துறைகளைப்பற்றிய புள்ளி விபரங்களடங்கிய அகராதிகளிலும், மேலே எடுத்துக்காட்டப்பட்ட புள்ளி விபரங்கள் கண்மூடித்தனமாகக் கொடுக்கப்பட்டிருப்பதாக நாம் கண்டு வருகிறோம். வருஷாந்த வர்த்தமான புஸ்தகங்களுக்கு கிரேட் பிரிட்டனில் உள்ள திருச்சபைகளால் கொடுக்கப்பட்டு வரும் புள்ளி விவரங்களிலிருந்து, கோவிலுக்குப் போகிறவர்களின் எண்ணிக்கை மொத்த ஜனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பாகமே என்று தெரிகிறது. பிரிட்டன் தேசம் பூராவும் கிறிஸ்தவர் நிறைந்த இடமென்றாலும் இன்று அது கிறிஸ்தவ நாடாகயில்லை. இங்கிலாந்து திருச்சபை மிகப்பிரதான அத்தியக்ஷ குருமார்களிலொருவருமான பிஷப் கோர் என்பவர் "இங்கிலாந்தில் கடவுளைப்பற்றிய நம்பிக்கை இறந்தொழிந்தது" என்று சமீபத்தில் எழுதியிருக்கிறார். அது மிகைப்படுத்திக்கூறியதெனலாம். ஆயினும் அது கிட்டத்தட்ட மெய்யான ஒரு விஷயம். அது "விட்டாக்கர்" பஞ்சாங்கம் கூறுவதைப்போன்று அர்த்தமற்ற விஷயமல்ல.

பிரான்ஸை எடுத்துக்கொண்டால், அங்குள்ள 3-கோடியே 80-லட்சம் ஜனத்தொகையில், 40-அல்லது 50-லட்சம் ஜனங்கள் தான் எப்போதாவது கோவிலுக்குப் போய் வருகிறார்கள். நான் இதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். நரக வேதனையாலும், சாஸ்வதமான சாபதண்டனையாலும் பயமுறுத்தப்பட்ட ஜனங்கள் ரோமானியக் கோவில்களில் வந்து குவிகிறார்கள். இப்புள்ளிகளைப்பற்றி கத்தோலிக்கர் எத்தகைய விவாதமும் செய்யமாட்டார்கள். ஆயினும் கோவிலுக்குப் போகாதிருக்கும் லட்சாதி லட்சம் ஜனங்களும் கத்தோலிக்கர்தான் என்பது அவர்களின் அபிப்பிராயம். இதை ஒரு நூதனமான நிலைமை என்று கூறலாம். ஞாயிற்றுக் கிழமை தோறும் காலையில் அரைமணி நேரம் கோவிலில் செலவு செய்யாமல் ஆடவரும் பெண்டிரும் அமைதியாக சாஸ்வதசாபத்தண்டனையைப் பெற்று வருவதை எண்ணிப் பாருங்கள். உண்மையில், அவர்கள் அதை நம்புவதில்லை. ஆறுமாதங்களுக்கு முன்பு, நான் பாரிஸ் நகரத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கு கழிந்த மகாயுத்த காலத்திற்குப்பிறகு ஜனங்கள் கோவிலுக்குப் போய் வருகிறார்களென்பது சுத்தப்பொய்யென்று நான் விசாரணையின் மூலமாகத் தெரிந்து கொண்டேன். தற்காலத்தில், பிரான்ஸ் கிறிஸ்துவநாடாகவேயில்லை. இந்த நிலைமை உறுதியாகவும், நிரந்தரமாகவுமிருக்குமென்று சொல்லலாம்.

ஐரோப்பாவிலுள்ள மிகப்பெரிய வல்லரசுகளில் ஜர்மனி மூன்றாவதாகும். இதுவும் பிரிட்டனைப்போலவே யிருக்கிறது. லண்டன், பாரிஸ், பர்லின், ஆகிய மூன்று நகரங்களும் ஐரோப்பாக் கண்டத்தில் மிகப்பெரிய நகரங்கள். அவற்றின் மொத்த ஜனத்தொகை, ஒரு கோடியே அறுபது லட்சம், அதில் 40 லட்சத்திற்கும் குறைவான மக்களே எப்போதாவது கடவுளை வழிபடுகிறார்கள். அல்லது தங்களுடைய வேதங்களைக் கேட்கிறார்கள். நகரங்களிலிருந்து, பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் புரட்சி இயக்கம் பரவத்தொடங்கி விட்டது. இங்கிலாந்திலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும் அப்புரட்சி இயக்கம், அயர்லாந்துக்கும், போலந்திற்கும் வியாபகமாகிக் கொண்டுவருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து அவ்வியக்கம் மெக்ஸிக்கோவிற்கும், தென் அமெரிக்காவிற்கும் காட்டுத் தீப்போல் விரைந்து சென்றுகொண்டிருக்கிறது. உலகத்தின் முப்பது தலை நகரங்களுக்குச் சென்றிருக்கிறேன். அங்கெல்லாம், அநேகமாய் ஒரே நிலைமையே காணப்படுகிறது. ஆனால் சில நகரங்களில் வேறுபாடுகளும் இருக்கக் கண்டேன். பெல்கிராட், சோபியா, ஏதென்ஸ் முதலிய இடங்களில் மதப் புரட்சி இயக்கம் காணப்பட வில்லை. ஆனால், அந்த நகரங்கள் யாவும் ஐரோப்பிய நாடுகளில் மிகப் பிற்போக்கானவையென்றும், அறியாமை மிகுந்தவை யென்றும் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை.

மேற்கூறிய புள்ளி விவரங்களை யெல்லாம் சம்பூரணமாக மெய்ப்பிக்க முடியும். உலக நிலைமையைத் தப்புத் தவறில்லாமல் விளக்க முடியும். மத விஷயமான முரண் பாடுகள் அனைத்திலுமுள்ள ஒவ்வொரு குறிப்பையும் போதுமான அளவு எடுத்தாள முடியும். ஆனால் அவைகளைப் பற்றி வேறொரு வெளியீட்டில் விரிவாக எடுத்துக் கூறப்படும். எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு நான் இது வரையில் கூறிவந்தது போதும். கிறிஸ்துவ மதத்தை ஒழித்து விடவேண்டுமென்று உலகப் புரட்சி நடந்து வருகிறது. அதை யாரும் மறுக்க முடியாது. ஒரு கிறிஸ்துவப் பத்திராதிபர் சமீபத்தில் தமது தலையங்கமொன்றில் ஒரு ஜோசியம் கூறியிருக்கிறார். அது என்னவென்றால் உலகத்தின் முடிவு அணுகி விட்டது என்பதாகும். ஏனென்றால் கிறிஸ்துவுக்கு விரோதமான ஆட்சி கண்ணெதிரே தலையெடுத்து விட்டதாம்! மிகப் பெரிய மத நூல் ஆசிரியர்களான டீன் இஞ்ஜ் போன்றவர்கள் "கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்ட கிறிஸ்து மதம் உபயோகமற்றதாகக் கண்டனம் செய்யப் பட்டு விட்டது" என்ற முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். டீன்இஞ்ஜ் அவ்வாறே சொல்லியிருக்கிறார். அவர் இங்கிலாந்து கிறிஸ்துவத் திருச்சபையின் முக்கியமான நாவலர். அவருடைய தீர்மானம் மிகத் தெளிவாயிருக்கிறது என்போம்.

தற்காலப் புரட்சி இயக்கம் நிரந்தரமானதல்லவென்றும், நவீன வாழ்க்கையின் காரணமாகவும், நூதன எண்ணங்களின் காரணமாகவும் அவ்வியக்கம் தோன்றியிருக்கிறதென்றும் அபிப்பிராயப்படும் அநேகர் இருக்கிறார்கள். மக்கள், விஞ்ஞான அலங்காரங்களாலும், பரிணாம விவகாரங்களாலும் கெடுக்கப்பட்டிருக்கிறார்களென்று அவர்கள் கருதுகிறார்கள். விஞ்ஞானம் தனது குழந்தைகளைப்புறக்கணிக்கிறது என்று ஏற்கனவே அவர்கள் பிரலாபித்து வருகிறார்கள். இருண்ட தெய்வீக வானத்தில் புதிய வெளிச்சம் தோன்றப்போவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

இவர்களுடைய கூற்றுகள் யாவும் அளவு மீறியவை. அவை மிகத்தவறானவை. அவையாவும் மதப்புள்ளி விவரங்களைப் போல் தாறுமாறானவை தான். தற்காலத்தில் புரட்சி இயக்கம் தோன்றி மறைந்து விடும் தன்மையதல்ல. ஆனால் அது இரண்டு நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்த நிலையான சரித்திர அபிவிருத்தியின் முதிர்ந்த பலனே யாகும். இவ்வியக்கம் விஞ்ஞான சாஸ்திரத்தால் தான் ஏற்பட்டதென்று சொல்லிவிட முடியாது. விஞ்ஞான சாஸ்திரங்கள் முளைப்பதற்கு முன்பிருந்தே இவ்வியக்கம் எங்கும் வியாபகமாயிற்று. டார்வின் பரிணாம விதிகளைப்பற்றி எதுவும் எழுதுவதற்கு முன்னமேயே அது கல்வியறிவுடையோர்களிடத்தில் பொதுவாயிருந்து வந்தது. நாம் இவ்விஷயத்தைப்பற்றிச் சரியாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே புரட்சி இயக்கத்தின் ஆரம்ப காலத்திற்கு நமது வாசகர்களை அழைத்துச் சென்று, அதன் முன்னேற்றத்தைச் சிறிது விளக்குவோம்.

## புதிய சகாப்தம்.

### 2-ம் அத்தியாயம்.

நாம் வாழும் தற்காலம் முந்திய பலவேறு காலங்களைவிட அநேக மாற்றங்களை அடைந்திருக்கிறது. இதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இதற்கு முந்திய காலங்களில் அடிக்கடி நாஸ்திகம் மலிந்திருந்ததுண்டு. ஆனால் நாஸ்திகத்திற்குப்பின் மதங்களும் பரவிக் கொண்டு வந்திருக்கின்றன. மனிதன் இயற்கையாகவே மதப்பற்றுடையவன் என்றும், அவனுடைய இயற்கையான அறிவே மதவழிச்செல்லும் தன்மையதென்றும் கூறும் சித்தாந்தங்கள் மதங்களின் சரித்திரத்தால் ரூபிக்கத் தகுந்ததாயில்லை. மனிதவர்க்கத்தின் ஒரு பகுதியை மதப்பற்றுள்ளவராய் வைத்திருக்கும் பொருட்டு உலகம் முழுதும் பத்துலட்சம் மதக்குருக்கள் தேவைப்படுகிறார்கள். நாஸ்திகம் பரவியிருந்த காலந்திற்குப்பின்மக்கள் தாங்களாகவே மதத்தை தழுவச்செல்லவில்லை. நான்காவது நூற்றாண்டில் கிறிஸ்துமதம் நிலை நிறுத்தப்பட்ட காலத்திலும், வால்டேர் காலத்திற்குப் பின்னும், பிரஞ்சுப்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# 50 வருஷத்திற்குப்பின் உலக நிலை.

## ஆசிரியர் எ. எம். லோ அவர்களின் (ஊகிப்பு) உத்தேசம்.

### பாதாள நகரங்களும் உருத்தோற்றங்களும்.

### மாத்திரை ஆகாரம்.

(C. R. D. மொழிபெயர்ப்பு)

நம்முடைய மக்களும், பேரன் பேர்த்திகளும் எந்தவிதமான உலகத்தைக் காணப் போகிறார்கள்?

நம்முடைய வாழ்நாளிலேயே எவ்வளவு அதிசயமான முன்னேற்றங்களைக் காணப்போகிறோம்?

இன்னும் 40, 50, 60 வருஷங்களுக்குப் பின்னால் உலகம் எந்த மாதிரியான மாறுதல் அடையப்போகின்றது?

வருங்கால உலக நிலையை நிகரமாக நிர்ணயிப்பது என்பது சிலர் நினைக்கின்றபடி அவ்வளவு சிரமமான காரியமல்ல.

மனித முன்னேற்றம் என்பது இன்ன இன்ன விதமாகத்தான் இருக்குமென்பதைச் சுலபத்தில் அளவெடுத்துவிடலாம்.

உலகம் இதுவரை எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கின்றதோ அந்த விகிதத்துக்குச் சிறிது அதிக வேகமாகவே செல்லும். பகுத்தறிவை உபயோகித்து நல்ல யோசனையுடன் சென்ற 40 வருஷத்திய முன்னேற்றத்தைப் பார்த்தோமானால் பிந்திய 50 வருஷத்தில் உலகம் எப்படி இருக்கும் என்று கண்டு பிடிப்பது கஷ்டமான காரியமல்ல.

இன்று மின்சார விளக்கு அதிசயத்தைப் பார்த்து இந்த நாகரீகமான காலத்தில் நாம் இருக்கிறோமே என்று மகிழ்ச்சி அடைந்து நம்மை நாமே பாராட்டிக்கொள்ளுகிறோம். ஆயினுங்கூட மின்சார சக்தியின் 100ல் 5 பாகத்தைத்தான் நாம் கண்டிருக்கின்றோமே தவிர இன்னும் 95 பாக சக்தியின் பயனை நாம் உணராமலும் அனுபவிக்காமலும் இருந்து வருகின்றோம். மின்சாரத்துக்காக நாம் செலவு செய்யும் தொகை 100 ரூபாயானால் அதில் 5ரூபாயின் பலனை மாத்திரம் அனுபவித்துக்கொண்டு 95 ரூபாய் பலனை அனுபவிக்காமல் விட்டுவிடுகிறோம்.

### 100க்கு 100 விகித சக்தி.

இன்றைக்கு 60 வருஷ காலத்திற்குப்பின் இந்த உலகம் எப்படி மாறுதலை அடையப்போகின்றது என்றால் மின்சாரத்தின் பலனை அனுபவிப்பதில் 100க்கு 100 பாகம் அனுபவிக்க முடியாவிட்டாலும் கிட்டத்தட்ட 80, 90 பாகத்துக்கு நெருங்கிவிடக் கூடும். ஆகவே 100க்கு 5 பங்கு அனுபவிக்கும் போதே நமக்கு இவ்வளவு சௌகரியமும் சந்தோஷமும் இருக்குமானால் 80, 90 பங்கு அனுபவிக்கும்போது நாமெவ்வளவு சௌகரியமும், சுகமும், சந்தோஷமும் அடையக்கூடும் என்பது விளங்கும். மனிதனுடைய முன்னேற்றம் என்பது ஒரு மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாகப் போக வேண்டுமென்று ஆசைப்படுகின்றானோ அந்த உத்வேகத்தைப் பொறுத்தே வாழ்க்கைச் சுகமும் உண்டாகக் கூடியதாகும்.

உதாரணமாக யந்திர சக்தியை உணர்ந்து அதனை அடிமை கொண்ட எதிர்கால மனிதன் அதன் பயனை அடைந்து மணிக்கு நூற்றுக்கணக்கான மைல் வேகத்தில் செல்லக் கூடிய நிலையில் இருந்து கொண்டு நமது இன்றைய நிலையைப்பார்ப்பானேயானால்வாழ்க்கையில்எவ்வளவோ காலம் வீணாகி விட்டதே என்று துக்கப்படுவான்.

மூடுபனியினாலும் கெட்ட சீதோஷ்ண நிலையினாலும்பத்துலட்சக்கணக்கான பவுன்களும் ஆயிரக்கணக்கான மணி நேரங்களும் வீணாகின்றது என்பதையும் போக்குவரத்துகளில் ஏற்படும் தடைகளினால் விளையும் தாமதங்களின் தொல்லைகளையும் நினைத்துப்பார்த்தால் நமக்கு எவ்வளவு காலம் எவ்வளவு பணம் வீணாகின்றது என்பது விளங்கும்.

ஆனால் நமக்குப் பிற்காலத்தில் வரும் சந்ததியார்கள் இந்தத்தொல்லைகளையும், நஷ்டங்களையும் எல்லாம் தாண்டி இவற்றையெல்லாம் மாற்றி விடுவார்கள்.

மூடுபனியென்பது ஒரு பழங்கதையாகி விடும். சீதோஷ்ண ஸ்திதி தண்ணீர்க் குழாயில் தண்ணீர் எடுத்துக் கொள்ளுவது போல் சரிப்படுத்திக் கொள்ளப்படும்.

இன்னும் சிறிது காலத்திற்குள்ளாகவே தெருக்களில் சூரியனுக்கு நிகரான பிரம்மாண்டமான விளக்குகள் பிரகாசிக்கும். இப்போது ஆகாயவிமானம் இறங்குவதற்குத் தனியாகப் பெரிய மைதானம் வேண்டியிருக்கிறது. இந்த மைதானம் வருங்காலத்தில் தேவையில்லை. வீட்டின் கூரைகள் யாவும் பெரிய மைதானம் போல் செய்யப்பட்டு விடும். அவரவர்களுக்குச் சொந்தமான ஆகாயவிமானங்களை அவரவர்களின் வீட்டுக் கூரையில் இறக்கிக் கொள்ளும்படியான வசதிகள் ஏற்பட்டு விடும்.

பாதாள நகரங்கள் பிரம்மாண்டமான குழாய்களின் மத்தியில் ஸ்தாபிக்கப்படும். இந்த நகரங்கள் பட்டப் பகல்போல விளக்குகளால் பிரகாசிக்கும். இங்கிலாந்துக்கும், ஐரோப்பா கண்டத்திற்கும் மத்தியிலுள்ள இங்கிலீஷ் சானல்என்னும் கடலின் வழியே போக்குவரவுக்காகபாதாளப் பாதை குழாய்களைக்கொண்டு ஏற்படுத்தப்படும். இப்படியே உலகத்திலுள்ள எல்லாப் பாகங்களுக்கும் செல்லப் பாதாளப்பாதைகள் ஏற்படும்.

இன்றையதினம் கம்பியில்லாத் தந்தி எவ்வளவு சாதாரணமாகப் போய்விட்டதோ அதைப்போல இன்னும் 50வருடங்களுக்குள் உருத்தோற்றங்கள் மிகச் சாதாரணமாகி விடும். (உருத்தோற்ற மென்றால் நாம் இருக்கும் இடத்தில் இருந்தபடியே ஆயிர மைலுக்கப்பாலுள்ள மனிதர்களைப்பார்க்கவும் பேசவும் ஏதுவான கருவி) வருங்காலத்தில் ரேடியோ எந்த விதமாக அபிவிருத்தி அடையுமென்றால் இன்றையிலிருந்து 60-வருடத்தில் நம்முடைய பேரன் பேர்த்திமார்கள் தங்கள் ஜேபிகளில் ஆளுக்கொரு ரேடியோ ஸெட் வைத்துககொண்டு தெருக்களில் நடந்த வண்ணமாகவே வெகு தூரத்திலுள்ளவர்களோடு பேசப்போகிறார்கள். அவ்வளவு முற்போக்கான காலத்தில் வசிக்கப்போகும் நம்முடைய பேரன் பேர்த்திமார்கள் நம்முடைய அறியாமையையும், முட்டாள் தனத்தையும் பிற்போக்கையும் கண்டு ஏளனம் செய்யப்போகிறார்கள்.

பிறகு சப்தத்தைப்பற்றியோ வென்றால் வருங்கால மனிதன் சப்தமும், பேரிரைச்சலும் நுழைய முடியாதவகையில்நகரங்களை சிருஷ்டிக்கப்போகிறான். சப்தத்தை அடக்குவதற்காக, கல், சுண்ணாம்பு, மண், சிமிட்டி இவைகளுக்குப்பதிலாக ரப்பர் எல்லாவற்றிற்கும் கவசமாக உபயோகிக்கப்படும்.

இன்றையதினம் நம்முடைய சிந்தனையின் வேகம் 50வருடங்களுக்கு முன்னிருந்ததைவிட அதிகரித்திருக்கிறது. இன்னும் 50 வருடங்களுக்குப்பிறகு இப்போதிருக்கும் வேகத்தை விட ஆயிரமடங்கு அதிகமான வேகத்தில் நம்முடைய யோசனைகள் ஓடும். யோசனை வேகத்தின் படி காரியத்தில் செய்து காட்டவுமான ஆற்றலும் அதிகரித்து விடும்.

நேரத்தையும் தூரத்தையும் சுருக்க வேண்டுமென்ற கருத்துடன் தான் ஒவ்வொரு யந்திரமும் அதில் விருத்தியும் கண்டு பிடிக்கப்படுகிறது. இவ்விதம் சுருக்க வேண்டியதின் அவஸ்யத்திற்கு வேகத்தில் உள்ளஆசையே காரணமாகும். முன்னேற்றம் வேகத்தை அடிப்படையாகக்கொண்டது.

### ஆகார-மாத்திரைகள்.

ஒருமணிநேரத்தில் நூற்றுக்கணக்கானமைல்கள் பிரயாணம் செய்வது சகஜமாய் விடுவதாலும், உலகத்தின் ஒரு மூலையிலிருந்தபடியே மற்றொரு மூலையிலுள்ள மனிதர்களோடு ஒரு விநாடியில் பேசும் சௌகரியத்தை அனுபவிக்கப் போவதனாலும் வருங்காலமனிதன் மெதுவாகப் போகும் எதைக்கண்டாலும் சகிக்க மாட்டான். சாப்பிடுவதற்கும் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளுவான் என்பது சந்தேகமான விஷயமே. ஒரு வேளைக்குவேண்டியஆகாரம் ஒரு மாத்திரை பரிமாணத்திற்கு வந்துவிடும். ஆகார சத்துக்கள் யாவும் அந்த மாத்திரையில் புகுத்தப் பட்டிருக்கும். பசி எடுக்கும்போது அந்த மாத்திரையில் ஒன்றை எடுத்து வாயில் போட்டு விழுங்கி விடுவான். இது பறந்த வண்ணமாகவே நடந்து விடும். தன்னுடைய வேகத்திற்குத் தடை ஏற்படாத வகையில் எல்லாவற்றையும் சுருக்கி விடுவான்.

### நித்திரை.

நித்திரையில் செலவழிக்க வேண்டிய நேரத்தையும், உபயோகிக்க வழி தேடுவான். தூக்கத்தினால் ஏற்படும் தேகபலத்தையும் ஓய்வையும் மின்சாரத்தின் உதவியால் பெற்றுக்கொண்டு தூக்கத்தில் செலவழியும் காலத்தை மிச்சப்படுத்திஉபயோகிப்பான். சாதாரண கடியாரங்களுக்குப்பதிலாக கம்பியில்லாத் தந்தி கடியாரங்களை உபயோகிப்பான். அது அவன் உடையில் ஒரு பாகமாய் இருக்கும். சிறிது நேரம் தூங்கி விழித்தவுடன் ஒருவிநாடியில் உலகில்நடக்கும் சகல விஷயங்களையும்கம்பியில்லாத்தந்தியின்மூலம் அறிந்து கொள்ளுவான். உலகவிஷயங்களை அறிந்து கொள்வதற்காக தினசரிப் பத்திரிகைகளைப் படிக்க வேண்டியதில் வீணாகும் காலமும் மிச்சப்பட்டு விடும். பிறகு இஷ்டப்பட்டால் உருத்தோற்றத்தின் உதவியால் உலகின் பல பாகங்களில் நடக்கும் விஷயங்களைப் பிரத்தியட்சமாய்க்கண்டறிந்து கொள்ளுவான்.

### உடை.

50 வருடங்களுக்குப் பிறகு மனிதன் அணியப்போகிற உடை இன்று நாம் அணிகிறதைப் போலிராது. உடை மிக லேசானதாக இருக்கும். மேலும், இன்று இருப்பது போல் மேலே. தரிக்கச்சொக்காய் கோட்டும், கீழே நெஜார் அல்லது தோவத்தியு

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# நமது கட்சியாரின்
## துரோகத்தால்
# மகத்தான தோல்வி.

**(ஜஸ்டிஸ் தனது தலையங்கத்தில் எழுதுவது)**

இந்தியா சட்டசபை தேர்தல் முடிவைப்பற்றி ஜஸ்டிஸ் பத்திரிகை எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:—

உள்ளுறத் துரோகங்கள்நடப்பதாயின்எக்கட்சியும், எந்த தேர்தலிலும் ஜெயிக்கமுடியாது. தோழர் ஏ. ராமசாமி முதலியார், சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் இவர்களின் தோல்வியால் தெரிந்துகொள்ளவேண்டிய பாடம் இதுவே. காங்கிரஸ்காரர்கள் வெற்றிகரமாகசெய்துவந்த பொய்ப்பிரசாரம் தோல்விக்கு மூலகாரணமாயினும், நமது சொந்த கட்சியிலேயுள்ள சிலரது தப்பிலித்தனத்தாலேயே தோல்வி ஏற்பட்டது. காங்கிரஸ்காரர்கள் மீது நாம் குறை சொல்ல முடியாது; அவர்களது போக்கிற்கும் நமக்கும் வெகுதூரம். உண்மையையும் விலைக்கு விற்று விட்டாகிலும்வெற்றிபெற வேண்டுமென்பதிலே நம்பிக்கையுள்ளவர்கள். நமது கட்சிக்காரர்களைப்பொறுத்த வரையில், நாம், ஒரு விஷயத்தைக் கூறவேண்டியிருக்கிறது. நமது கட்சியை சீர்படுத்திக்கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. தீங்கிழைக்கக் கூடியவர்களை நமது கட்சியிலிருந்து ஒழித்து, மிகவும் பெரிய லட்சியத்தோடிருக்கும் நமது கட்சியைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். மிகுந்த வெட்கத்துடனேயேநாம் இதைச்சொல்கின்றோம். மாகாணமெங்குமுள்ள நமதுஉண்மையானகட்சிக்காரர்கள் இத்தோல்வியைக்கண்டு, வெட்கத்துடனே தலைகுனிவார்கள். இவ்வெட்கக் கண்ணீரானது, இத்தோல்வியின் ஆழ்ந்த உண்மையை அறிந்தகோடிக்கணக்கான நமது சகோதரர்களின் மனதிலே கொழுந்து விட்டெரியும் இது நமது கட்சிக்காரரின் தனிப்பட்ட சொந்ததோல்வியல்ல. அதைவிட மிகவும் பெரியதானதாகும். இத்துக்கமும் வெட்கமும் நம்மை தீவிரமாக வேலைசெய்யத்தூண்டி இத்தோல்விக்குப்பழிக்குப் பரிகாரம் செய்ய நமக்கு ஊக்கமளிப்பதாக இருக்கட்டும். எப்பொழுதும் ஜெயமேற்படுவதென்பதுமனித சக்தியிலில்லை. ஆனால்மானிடர்கள் தோல்வியையேவெற்றியாக மாற்றிக்கொள்ளமுடியும். டாக்டர் நாயரும், சர் தியாகராயரும் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தோல்வி ஓர் வெற்றியே. அதிலிருந்தே நமது மகத்தான ஜஸ்டிஸ் இயக்கம் உதித்தது. தென்னிந்தியாவிலே ஜனநாயகத்துவத்தைக்கொணர்ந்து, பல தலைமுறைகளாக அடிமைத்தனத்தில் கட்டுப்பட்டிருந்த பொது ஜனங்களை விடுவிக்க முடிந்தது. எனவே இந்தத் தோல்விகளையும்நாம் வெற்றியாகமாற்றலாம். ஆனால் நாம் சரியான வழியிலே நமது வேலையை சீர்படுத்திச் செய்ய வேண்டும். (தமிழ்நாடு)

## கல்வி மந்திரிக்கு வரவேற்பு.

### ஈரோடு முனிசிபாலிடியின் தீர்மானம்.

ஈரோடு முனிசிபாலிட்டியின் ஸ்பெஷல்கூட்டம் 15-11-34ந் தேதி நடைபெறும். அது சமயம்கீழ்க்கண்ட தீர்மானம் ஆலோசனைக்கு வரும்.

"கல்வி இலாகா மந்திரி கனம் திவான் பகதூர் எஸ் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் இம்மாதம் 24ந் தேதி இவ்வூருக்கு விஜயம் செய்யும்போது ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்துக்கொடுத்தல்" என்பதாகும்.

### சுயமரியாதை இளைஞர் மன்றம்.

மேற்படி மன்றத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 11-11-24ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மன்றத்தின் காரியாலயத்தில் நடைபெற்றது.

அது சமயம் 1933-34 வருடத்திய வரவு செலவு கணக்கு பரிசோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டது. மன்றத்தின் காரியதரிசிகளால் தயாரிக்கப்பட்ட (1933-34) இரண்டாவது ஆண்டு அறிக்கை ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது என க்காரியதரிசி எழுதுகிறார்.

# அபேதவாதக்கட்சி.

## லக்ஷியமும், வேலைத்திட்டமும்.

## எல்லா சொத்துகளும் சர்க்கார் ஆதீனத்திலிருக்கவேண்டும்.

சமீபத்தில் ஏற்படுத்தப்பட்ட பாஞ்சால காங்கிரஸ் அபேதவாதக்கட்சியின் சார்பாக கீழ்க்கண்ட அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது:—

"அபேதவாதஅரசாங்கம் ஸ்தாபிப்பதென்ற லக்ஷியத்தையடைவதும் பொருட்டே இக்கட்சி காங்கிரசுக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நாட்டினர் மும்மரமாக உழைக்கத்தக்கஉயர்லக்ஷியத்தையும், உண்மையில் நிர்மாணத்தன்மை வாய்ந்த ஒரு வேலைத்திட்டத்தையும் நாங்கள் அவர்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். பூர்ணசுயராஜ்யம்பெறவோ பொருளாதாரப் புனருத்தாரணம் விளைவிக்கவோ தற்பொழுதுள்ள காங்கிரஸ்வேலைத்திட்டம்உபயோகப்படாது.

பொருளாதார அடிப்படையின் பேரில் மக்களிடை கட்டுப்பாடு விளைவிப்பதே நாங்கள் உடனே சாதிக்கவிருக்கும் நோக்கமாகும். தற்பொழுதுள்ள சமூக அமைப்பு தனிப்பட்டோர் சொத்து, மதம் இவைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், வகுப்புக்களிடை வெறுப்பும், மாச்சரியமும் ஏற்படுமாறு செய்துள்ளது. பொருளாதார முன்னேற்றத்திற்கும், அரசியல்முன்னேற்றத்திற்கும் பெருந்தடையாக உள்ளது வகுப்பு வாதமேயாகும். அதையொழிக்க நாங்கள் கடுமையான போராட்டம் நடத்துவதென உறுதிகொண்டுள்ளோம்.

### வகுப்பு ஒற்றுமை.

பொருளாதார நலம் பொதுவானதாயிருப்பதை ஆதாரமாகக் கொண்டு முஸ்லீம்கள், சீக்கியர், ஹிந்துக்கள் இவர்களிடை ஒற்றுமைவிளைவிக்கஇதுவரை முயற்சி செய்யப்படவில்லை. அபேதவாதமுறையில் பொருளாதாரப் புனருத்தாரணத் திட்டமொன்று வகுத்து அதன்படி எல்லாவகுப்புகளையும் சேர்ந்த தொழிலாளர்களும் ஒன்றுபடுமாறு செய்வது எங்கள் நோக்கமாகும்.

அபேதவாதம் இந்தியாவின் நிலைமைக்குத் தகுந்த ஒரு பொருளாதார முறையாகுமென நாங்கள் நம்புகிறோம். மேலும் அது தற்பொழுதிருந்துவரும் வகுப்புவாதவிஷத்திற்கு தகுந்த மாற்றாகும். சமதர்ம லக்ஷியத்தை எய்த அபேதவாதமொன்றேவழியாகும்.

தற்பொழுது தனிப்பட்டவர்களின் ஆதிக்கம் ஓங்கிநிற்கின்றது. இதன் பலனாக தொழிலாளர்களின்உழைப்புக் கொண்டு தொழிலாளர்கள் அல்லாதவர்கள் கொடிய முறையில் நலமடைந்து வருகின்றார்கள். நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் 5-ல் 4பாகம் நிலச்சொந்தக்காரர்களுக்கு போய் விடுகிறது. எஞ்சியுள்ளபாகத்தைக்கொண்டே அதை உழுது பாடுபட்டுபயிரிடுபவர்கள்திருப்தியடையவேண்டியிருக்கிறது.

சொத்துக்களின் சொந்தக்காரர்களை, அவைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மக்களின் நலத்திற்கு உபயோகிக்குமாறு தூண்டுவதுஅசாத்தியமாகும். தற்பொழுது நிலத்தைப் பயிரிடுபவர்கள் தங்கள் நலத்திற்காக அன்றி நிலத்தின் சொந்தக்காரர்களின் நலத்திற்காகவே பாடுபட வேண்டியிருக்கிறது.

எனவே சர்க்காரே நிலங்களையும், மூலதனத்தையும் தங்கள் ஆதீனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நாங்கள் ஏற்படுத்த விரும்பும் ராஜாங்கம்கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்:—

1. பொருளாதாரப் போட்டியை எதிர்த்து ஒத்துழைப்பை அடிப்படையாகக்கொண்டுபொருளாதார வாழ்வை வகுக்கும்.
2. ஏழைகள் தொழிலாளர் உழைப்பைக்கொண்டு பிறர் நலம் பெறுவதைத் தடுக்கும்.
3. அனைவருக்கும் கல்வி போதித்து, வேலைக்கான பயிற்சி அளித்து, வேலை பெறுமாறு செய்யும்.
4. மத சம்பந்தமான மூடநம்பிக்கைகளை எதிர்த்து வகுப்புவாதத்தை ஒழிக்கும்.
5. பிரஜைகளின்நடத்தையைச்சீர்ப்படுத்தி அவைகளை முன்னேற்றும். (இந்தியா)

# கார்த்திகை தீபமும், காட்டுமிராண்டித்தனமும்

## விளக்கில் விழுந்து மாளும் விட்டில் பூச்சிகள்.

(சுயமரியாதைப்பாவலர் தோழர் தி. அ வேங்கடசாமி)

பண்டைக்காலத்திய நம் மூதாதைகள், அக்காலத்தில் தாங்கள் பெற்றிருந்த அறிவனுபவங்களுக்கேற்ப அன்றைய கால தேச வர்த்தமானங்களை யொட்டி அவர்களது நடையுடை பாவனைகள் கொண்டாட்டங்களாதியான வாழ்க்கை முறைகளை நடத்திவந்திருக்கிறார்கள்.

முதன்முதலாக மனிதத் தோற்றம் திடீரென்று தோன்றி விடவில்லை. குரங்கினத்திலிருந்தே நிமிர்ந்து நடத்தலாகிய காரணத்தால் மூளை விருத்தி (பகுத்தறிவுணர்ச்சி)யும், அவயவமாறுதல்களும் ஏற்பட்டு முற்காலக் காட்டு மிராண்டிமனிதனிலிருந்து தற்கால ஆகாயவிமானம் ஊர்கிறவன் வரையிலும் மனித நாகரீகம் பல்லாயிர வருடகாலமாகப் படிப்படியாக வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

இதன் உண்மையை அதாவது குரங்கினத்திலிருந்தே அதற்குரிய நடை நொடி பாவனை இடம் மாறுதல் முதலிய காரணங்களால் மனிதத்தோற்றம் உண்டாகியிருக்கிறது என்பதை விஞ்ஞான விற்பன்னர்கள் தம்ஆராய்ச்சித்திறமையால் கண்டறிந்துள்ளார்கள்.

இவ்விஷயத்தை நன்குணரவேண்டுமானால் தோழர் எம். சிங்காரவேலு எழுதிய “மனிதஉற்பவம்” என்னும் நூலை ஆராய்ந்தால் தெளிவுறக்காணலாம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் “மனிதன் முன்னேற்றமடைந்த குரங்கு” (A man is a developed Ape) தான். வால்+நரம் =வானரம் என்னும் குரங்கின் மற்றொரு பெயரும் இதனுண்மையை விளக்கும். (வால்நரம் என்றால் வாலுள்ள மனிதப்பிராணி என்று பொருள் படும்.)

அன்றியும், வானரங்களை நம்நாட்டில் தெய்வம்போலப்பாவித்து அவைகளைத் தொந்தரவு செய்யாமலும் அவைகளுக்கு உணவு கொடுத்தும் கோவில் கட்டிக் கல்விக்கிரகம் வைத்து வணங்கியும் மக்கள் மரியாதை செய்வதிலிருந்தும் குரங்கே மனிதனுடைய மூதாதையென்பதை யொருவாறு உணரக்கிடக்கின்றதல்லவா?

இத்தகைய மிருக (குரங்கு)ப்பருவத்திலிருந்து பல்லாயிர வருடகாலமாக வளர்ச்சியுற்றது மனிதத்தோற்றமாகையால் அவர்களுடைய நடையுடை பாவனைகளும், அறிவு அனுபவங்களும் ஒவ்வொரு தலைமுறையிலும் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.

தற்காலத்திய குரங்குகளைப் போலவே முற்காலத்திய மானிட பரிணாமஜீவர்கள் காடுறை வாழ்க்கையும், நிர்வாணத்தோற்றமும், காய்கனி கிழங்குணவுகளும் கொண்டு வாழ்ந்ததாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

அத்தகைய மானிடங்களுள் சில வகுப்புக்கு மட்டும் தாம் வசிக்கும் இடத்திற்குத் தக்கவாறும், உணவு முதலிய சௌகரியங்களுக்குத் தக்கவாறும், மூளை பலமும், தேகபலமும் அதிகரித்து வந்திருக்கிறது. மூளை பலமுள்ளவனும், தேக பலமுள்ளவனும், காட்டுமிராண்டி (பாமரர்)களையும், பலவீனர்களையும் ஏமாற்றியும், இம்சித்தும் இயற்கை வாழ்க்கை முறைக்கு மீறிச் செயற்கையின்ப வாழ்க்கையை வலிந்து பெற முயற்சி செய்து வந்திருக்கிறான். மூளை பலமுள்ளவன் செய்யும் சூழ்ச்சிகள் தேக பலமுள்ளவன் முன் செல்லுபடியாகாமல் போகவே மூளை பலமுள்ளவன் (சூழ்ச்சிக்காரன்) தேகபலமுள்ளவனை ஏமாற்றித் தன் பக்கத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டி அவனைத் தலைவனென்றும், கடவுளம்சம் என்றும், விஷ்ணுவின் அவதாரமென்றும் புகழ்ந்து தூக்கி வைத்தும் தன்னைப்போன்ற சூழ்ச்சிக்காரர்கள் எல்லாம் பூதேவர்களென்பதாகச்சொல்லி அந்தப்படியே சுருதி ஸ்மிருதி புராணமென்றெல்லாம் புழுகி எழுதி வைத்தும் நம்பும்படி செய்து விட்டான்.

அதனால் தேக பலமுள்ளவனுக்குப்பாமர ஜனங்களிடையே பெருத்த செல்வாக்கும், மதிப்பும் ஏற்பட்டது. அதனால் அவன் (பலசாலி) தன்னலத்தைக் கருதி சூழ்ச்சிக்காரனின் வசப்பட்டு விட்டான். சுயநலங் காரணமாக இருதிறத்தினரும் ஒன்றுபடவே சூழ்ச்சிக்காரன் சொல்லியதெல்லாம் வேதவாக்காகப் பாமர ஜனங்கள் நம்பும்படி ஏற்பட்டது. சூழ்ச்சிக்காரன் தன்னுடைய வழிவழி வங்கிஷமனைத்தும் எப்பொழுதும் உட்கார்ந்த இடத்திலிருந்தே எல்லாச் சௌகரியங்களையும் அனுபவிக்கும்படியான திட்டங்கள் வகுத்து அதற்கானவுதவியைத் தேகபலமும் செல்வாக்குமுள்ள தலைவர்கள் மூலம் பெற்று கோயில்கள், குளங்கள், சத்திரங்கள், மடாலயங்கள் முதலிய பொது நிலயங்களை ஏராளமாக ஸ்தாபித்துக்கொண்டார்கள். அவைகளை ஸ்தாபனம்பண்ணி வைத்தவர்கள் இப்பிறப்பில் கஷ்டப்படாமலும், மறுபிறப்பில் (செத்த பிறகு) தேவபோகமும், சுவர்க்க இன்பமும் அனுபவிப்பார்களென்று எழுதி வைத்துப் பாமர மக்களிடையே பிரசாரம் செய்து வந்ததால் அதன் சூழ்ச்சித்தன்மையை உணராது நம்பி தலைவர்கள் என்பவர்கள் தங்கள் பொருளையெல்லாம் செலவழித்து ஓட்டாண்டியாகிப் பின்னும் மோக்ஷ மோகத்தால் உழைப்பாளிகளின் பொருளைக்கொள்ளையிட்டும் வழிப்பறிசெய்தும்கூட ஷை ஸ்தாபனங்களை ஏராளமாகப் போட்டி போட்டுக்கொண்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள் (திருமங்கையாழ்வார் சரித்திரம் முதலியன இவ்வுண்மையை விளக்கும்)

ஷை கோயில், குளம், தீர்த்தம், சத்திரம், மடாலயம் இவைகளையெல்லாம் சூழ்ச்சிக்காரர்கள் தங்களுக்கே சொந்தமாக்கி தங்களைத்தவிர அவற்றை எவரும் அநுபவிக்கக்கூடாதென்றும், தாங்களே அவைகளை அனுபவிக்கப் பிறந்தவர்களென்றும் ஏமாற்றிக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

அன்றியும் சூழ்ச்சிக்காரர்கள் எழுதிவைத்துள்ள பொய்யான ஏடுகளை நம்பி அதன் வஞ்சகத்தை அறியாது வேடுவன்வலையில்படும்பக்ஷிக்கூட்டம் போலவும், விளக்கில்பட்டு மடியும் விட்டில்கள் போலவும் பாமர ஜனங்கள் தங்களுழைப்பையெல்லாம் அவர்களுக்கே கொட்டித் தாங்களொரு சுகத்தையும் அறியாது மாண்டு மண்ணோடு மண்ணாகிக்கொண்டு வந்திருக்கிறார்கள், வருகிறார்கள்.

வெறும் வீடு சோறு போடுமா? அந்த ஸ்தாபனங்களின் மூலமாக சதாகாலமும் வரும்படி அதாவது காணிக்கை என்றும், உண்டியலென்றும், ஆராதனைகளென்றும், அர்ச்சனைகளென்றும், தேர் திருவிழாக்களென்றும் பலவிதமான கட்டுத்திட்டங்களேற்படுத்தி அதன் மூலமாக வருஷம் 366 நாளும் பாமர மக்களுழைப்பின் பலனானது பல துளி பெருவெள்ளமாகத் தங்களைத் தேடி வந்து கொண்டிருக்கும்படியாகவும், அதன் மூலமாகத் தங்களினத்தார்களும், தாங்களும் மேல் நோவாமல் பரம்பரை பரம்பரையாகச் சகல சுக போக வைபவங்களையும் அனுபவித்துக்கொண்டு வரும்படியாகவும் சூழ்ச்சிகளின் மூலமாகவும், தந்திரங்களின் மூலமாகவும் செய்துகொண்டார்கள். எப்படியெனில், (இந்நாட்டில் பல லக்ஷக்கணக்கான தேர் திருநாளுண்டு. அவையெல்லாம் சொல்லவேண்டுமானால் ஏட்டில் இடம் பெறாதாதலால் முக்கியமான சிலவற்றை மாத்திரம் குறிப்பிடுவோம்.)

சித்திரை மாதம் கள்ளழகர் திருநாள், வைகாசி மாதம் ஆழ்வார் திருநாள், திருச்செந்தூர் திருநாள், ஆனி மாதம் பிட்டுத் திருநாள், ஆடி மாதம் ஆண்டாள் திருவாடிப்பூரம், இராமேஸ்வரத் திருநாள், ஆவணி மாதம் நரியைப் பரியாக்கிய திருநாள், புரட்டாசி மாதம் திருப்பதி வெங்கடாசலபதிக்குக் கோவிந்தாப் போட்டுக் குடுமியைப் பறி கொடுத்துக் குட்டிச்சுவராய்த் திரும்பிவரும் திருநாள், ஐப்பசி மாதம் நாட்டைப் பிடித்தாட்டி ஓட்டாண்டியாக்கும் தீபாவளித் திருநாள், அதன்பின் இபபொழுது சமீபத்தில் இதோ! கார்த்திகை மாதத்தில் வரப்போகிற கார்த்திகைத்திருநாள் (இதன் பின் மாதங்களிலும் எத்தனையோ திருநாள்கள் உண்டு. எனினும் கார்த்திகை தீபத்திருநாளே இங்கு எடுத்துக்கொண்டதாதலால் அதனைப்பற்றித் தொடங்குவோம்)

இக்கொண்டாட்டத்திற்குக் காரணம் என்ன என்று கேட்டால் மகாபலி சக்கிரவர்த்தியிடம் மகாவிஷ்ணு மூன்றடி மண் பிச்சை கேட்டு பூமியை ஓர் அடியாலும், வானத்தை ஓர் அடியாலும் அளந்துவிட்டு மூன்றாவதடிக்கு என்ன வழியென்று கேட்க மகாபலி சக்கிரவர்த்தி தன் சிரசைக் காட்டவே மகாவிஷ்ணு (சத்துவ குண தெய்வம்) சிரசில் ஏறி மிதித்துப் பாதாளத்தில் அமிழ்த்தி விட்டதாகவும், அதுசமயம் மகாபலி மகாவிஷ்ணுவினிடம் தனது ஞாபகார்த்தமாகக் கார்த்திகை மாதம் பவுரணை முதல் மூன்று நாள்கள் நாடெங்கும் தீபவிழாக் கொண்டாட வேண்டுமென வரங்கேட்க அதன்படி மகாவிஷ்ணு வரங்கொடுத்ததாகவும், அந்தப்படி பரம்பரையாக நடந்து வருவதாகவும் இந்துக்களில் ஒரு சாராராகிய வைணவர்கள் சொல்லக்கூடிய அண்டப்புளுகு கதையிது.

இன்னொன்று மற்றொரு சாராராகிய சைவத்திருக்கூட்டத்தார் சொல்லுகிற கதை மிகவும் வேடிக்கையானது. அதாவது பிரமாவும் விஷ்ணுவும் “நான் தான் பெரியவன்” “நான் தான் பெரியவன்” என்பதாக இரண்டு பேருக்குள்ளும் தர்க்கம் உண்டானதாகவும், அந்தத்தர்க்கம் தீர்த்துக்கொள்ள முடியாமல் இருவரும் கைகலந்து சண்டை போட்டுக் கொள்ளும்படியான நிலைமைக்கு வந்து விடவே இனி உலகமே அழிந்து போகுமென்று 33 கோடி தேவர்களும், 480000 ரிஷிகளும் பயந்து போய் பரமசிவனிடம் முறையிட்டதாகவும் அதற்கவர் மனதிரங்கி இருவருடைய சண்டையைத் தீர்த்து வைப்பதாகச் சொல்லி அந்தச்சண்டைக்காரர்களை அழைத்து வைத்துக் கொண்டு “நான் ஒரு பெரிய உருவம் எடுக்கிறேன். அந்தவுருவத்தின் முடியைப் பிரமாவும், அடியை விஷ்ணுவும் தொட்டு

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க,

# ராஜா சர். அண்ணாமலை மீது வழக்கு.

## தோழர் சுப்பையா செட்டியார் மானநஷ்ட தாவா.

### ராஜா சர். சாக்ஷியம்.

### “திவான்பகதூர் முருகப்ப செட்டியாருக்கும் எனக்கும் விரோதம்.”

### “என்னைக் கெடுக்க முடிவு செய்திருக்கிறார்கள்”

தோழர் சுப்பையா செட்டியார் என்பவர் முருகன், (ஹரிஜன்) ராஜா சர். அண்ணாமலை செட்டியார் இருவர் மீதும் தேவகோட்டை சப் கோர்ட்டில் ரூபாய் 25 ஆயிரத்துக்கு மான நஷ்ட தாவா செய்திருக்கிறார்.

இதற்குக் காரணம் தோழர் சுப்பையா செட்டியார் மீதுவேண்டுமென்று ஒரு வழக்கு ஜோடிக்கப்பட்டு நடந்ததாம். அந்த முதல் வழக்கின் விபரம் பின் வருமாறு:—

1931ம் வருஷம் ஜனவரி மாதம் மாட்டுப் பொங்கலன்று மாலை 5-30 மணிக்கு முருகன் கானாடு காத்தானிலுள்ள வாதியின் வீட்டுக்குச்சென்று தனக்கு தனக்கு பாக்கியிருக்கிற விறகு பணம் ரூ 15-ஐயும் கொடுக்கும்படி கேட்டான். செட்டியாருக்கு (தோழர் சுப்பைய செட்டியார்) கோபம் வந்து முருகன் மணிக்கட்டில் அரிவாளால் வெட்டினார். முருகன் பள்ளத்தூருக்குச் சென்று ஒரு டாக்டரிடம் சர்டிபிகேட் பெற்றுக்கொண்டு இரவு 8. மணிக்கு பள்ளத்தூர் போலீஸ் ஸ்டேஷனில் தோழர் சுப்பையா செட்டியார் மீது ஒரு வழக்கு ரிஜிஸ்தா செய்தான். மறு நாள் காலை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மேற்கொண்டு விசாரணை செய்யாமலே கானாடுகாத்தானுக்குச் சென்று தோழர் சுப்பையா செட்டியாரைக் கைது செய்தார். தோழர் செட்டியாருக்குப் பிறவியிலேயேஒருகை நொண்டியாயிருந்தும் கூட, போலிசார் அவருக்குக்கைவிலங்குட்டுத் தெருவோடு சுமார் 1 பர்லாங் தூரம் அழைத்துச் சென்றார்கள். அன்று சந்தைக்கு வந்திருந்தவர்கள் யாவரும் இதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சந்தைக்கருகில் இவருடைய மோட்டாரிலேயே ஏற்றிமாஜிஸ்டிரேட்முகாம் செய்திருந்த திருவாடானைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். போலீசார் எதிர்த்தும் கூட மறுநாள் இவர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்'

### தோழர் செட்டியார் வாதம்

தனக்கும் ராஜா சர். அண்ணாமலை செட்டியாருக்கும் இருந்த மனஸ்தாபத்தால் ராஜாவினுடைய கையாட்களான முருகன் முதலியவர்கள் மூலம் ராஜாவே இந்த வழக்குக்குப் பண உதவி செய்து மேற்கொண்டு நடத்தும் படி தூண்டியதாக தோழர் சுப்பையா செட்டியார் வாதித்தார். ஏற்கனவே தோழர் ராமனாதம் செட்டியார் ராஜா மீது தொடுத்திருந்த வழக்கில் தான் (தோழர் ராமனாதன் செட்டியார்) மைனரா யிருந்த பொழுது தன்னுடைய எஸ்டேட்டை நிர்வாகம் செய்ததைப்பற்றிக் கணக்குக்கொடுக்கும்படி கேட்டிருந்தார். அந்த வழக்கில் தோழர் ராமனாதம் செட்டியாருக்கு சாதகமாக தோழர் சுப்பையா செட்டியார் வேலை செய்தார். இது மாதிரி தனக்கு விரோதமாக வேலை செய்தால் அதனால் கெடுதி நேரிடும் என்று ராஜா தோழர் சுப்பையா செட்டியாரை பயமுறுத்தினார்.

தோழர் சுப்பையா செட்டியார் சர். அண்ணாமலை தன்னை ராஜா என்று சொல்லிக்கொள்வதை பற்றியும், இன்னும் ராஜாவினுடைய விஷயங்களைச் பற்றியும் சென்னைப் பத்திரிகைகளுக்கு எழுதியிருந்தார்.

1930 வருஷத்தில் ராஜா 4 தரம் தோழர் சுப்பையா செட்டியாரை கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்படுத்த முயற்சித்தாராம். இப்பொழுது முருகன் மூலமாக இந்த வழக்கைத்தொடுத்திருக்கிறார்.

தன்னை விலங்கிடச் செய்தது தன்னை அவமானப்படுத்துவதற்காக ராஜா செய்ததுதானென்று, மற்றவர்களை பயமுறுத்துவதற்காக வென்றும் தோழர் சுப்பையா வாதித்தார்.

இந்த வழக்கை விசாரித்தடிவிஷனல் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளி யென்று தீர்மானித்துக் கோர்ட்டுகலையும் வரையில் காவல் தண்டனையும், ரூ 250 அபாராதமும் விதித்தார். அப்பீலில் செஷன்ஸ் ஜட்ஜ் தண்டனையை ரத்து செய்து டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டை பலமாகக் கண்டித்தார்.

தோழர் சுப்பையா செட்டியார் 1932ல் மான நஷ்ட வழக்குத்தொடுத்தார். முதல் பிரதிவாதியான முருகன், ராஜா தன்னைத் தூண்டவில்லை யென்று கூறுகிறான்.

தனக்கும், இதற்கும் சம்பந்த மில்லையென்று ராஜாவும் கூறுகிறார்.

வாதியின் தரப்பில் 14 சாக்ஷிகள் விசாரிக்கப் பட்டனர்.

வாதி தரப்பில் திவான் பகதூர் முருகப்ப செட்டியார், தோழர் எஸ். ஏ. அண்ணாமலை செட்டியார், (எம். எல். சி.) தோழர் பழனியப்ப செட்டியார், தோழர் வி. வி. ஆர். சுப்பையா செட்டியார் முதலியவர்கள் சாக்ஷிகளாக விசாரிக்கப்பட்டனர், குறுக்கு விசாரணையில் தோழர்கள் முருகப்ப செட்டியாரும் சுப்பையா செட்டியாரும், ராஜாவுக்குவிரோதிகளென்றும், ராஜாவுக்கு எதிராக சில செட்டியார்களுக்குள் சதி நடந்து வருகிறதென்றும், இந்தச்சதியின் காரணமாகத்தான் சாட்சிகளெல்லோரும் ராஜாவுக்கு விரோதமாகச் சாட்சியம் கொடுக்க முன்வந்திருக்கிறார்களென்றும் கூறப்பட்டது. முருகன் சார்பாக 5 ஆதி திராவிடர்கள் விசாரிக்கப்பட்டனர். தன்னுடைய வழக்கிற்கு ராஜா பணம் கொடுக்க வில்லையென்றும், தன்னுடைய மைத்துனன் அடைக்கன் கங்காணி என்பவன் தான் பணம்கொடுத்தானென்றும் முருகன்கூறினான்.

ராஜா தனக்காக ஏற்கனவே 3 சாக்ஷிகள் விசாரித்திருக்கிறார். வேப்பேரியிலுள்ள மருந்துக்கடை குமாஸ்தா ஒருவரும் விசாரிக்கப்பட்டார்.

தங்களுக்கு ராஜா ஒரு உதவியும் செய்ய வில்லை யென்று வழக்கை நடத்திய இன்ஸ்பெக்டரும், சப் இன்ஸ்பெக்டரும் கூறினார்கள்.

### மான நஷ்ட வழக்கு.

### ராஜா சாக்ஷியம்.

ராஜா சர். அண்ணாமலை செட்டியார் தன் சார்பாகப் பின்வருமாறு கூறினார்:—

இந்த வழக்கில்நான் இரண்டாவது பிரதிவாதி 1923-ம் வருஷத்தில் எனக்கு “சர்” பட்டம் கொடுக்கப்பட்டது. 1929-ம் வருஷத்தில் ராஜா பட்டம் கிடைத்தது. இது 1929-ம் வருஷம் மார்ச்சுமாதம் 1-ந்தேதி கொடுக்கப்பட்டது எனக்கு நினைவிருக்கிறது.

1929-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ந் தேதி வாக்கில் 75 செட்டிமார் கிராமங்களிலுள்ள நகரத்தாரில் அநேகமாக எல்லோரும் எனக்கு ராஜா பட்டம்கிடைத்ததற்காககோயிலூரில் வாழ்த்துக் கூறினார்கள். சிதம்பரத்திலுள்ள அண்ணாமலை சர்வ கலாசாலையை நான் ஸ்தாபித்திருக்கிறேன். அந்த சர்வ கலாசாலைக்கு நான் உப அத்தியக்ஷர். அந்தப் பதவியும் பரம்பரையானதே. 1916-ம் வருஷத்திலிருந்து நான் 3 வருஷகாலத்திற்குச் சென்னை சட்ட சபையில் அங்கத்தினராக இருந்திருக்கிறேன், அதற்குப் பிறகு 1920-ம் வருஷத்தில் ராஜாங்க சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இம்பீரியல் பாங்கிலும் எனக்கு சம்பந்தமுண்டு. நான் இம்பீரியல் பாங்க் கவனர்ராயிருந்திருக்கிறேன். சில காலம் டைரக்டராகவு மிருந்திருக்கிறேன்.

1920-ம் வருஷம் முதற்கொண்டு ராஜாங்க சபைக்குத் தேர்தல் நடந்த போதெல்லாம் நான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறேன். நான் இப்பொழுதும் இம்பீரியல் பாங்க்கவர்னர். நான்சென்னை சர்வகலாசாலை செனட் சபையில் ஜீவிய அங்கத்தினர். நான்உயர்தரக் கல்விக்குச் செய்திருக்கும் தொண்டுக்காக 1922-ம் வருஷத்தில் எனக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளிக்கப்பட்டது.

இந்த வழக்கில் வாதியான சுப்பையாசெட்டியாரை எனக்குத்தெரியும். அவர் என்னுடைய பங்காளிகளில் ஒருவர். சோ. ராம.அரு.ராமனாதம் செட்டியார் என்ற இன்னொரு பங்காளியுமிருக்கிறார். அவர் 1930ம்வருஷத்திய ஓ. எஸ். 109ம் நம்பர் வழக்கில் வாதி. அந்த வழக்கில் நான் ஒரு பிரதிவாதி. அந்தவழக்கு தேவகோட்டை சப் கோர்ட்டிலிருக்கிறது.

1930ம் வருஷத்தில் “தமிழ்நாடு” என்ற பத்திரிகையில் என்னைப்பற்றி ஜூலைமாதம் 10ந்தேதி ஒரு வியாசம் வெளியானது. எனக்கு ஞாபகமிருக்கிறது. (எக்ஸிபிட் O) அந்த வியாசத்தைப்பற்றி நான் ஜூலை மாதக்கடையில் கேள்விப்பட்டேன். அந்த வியாசம் எழுதியது யாரென்று எனக்குத் தெரியும். இந்த வழக்கில் வாதியாயிருப்பவர் தான் அதை எழுதினார். எக்சிபிட் 3ம் நம்பரைப் பற்றி ராமனாதம் செட்டியார் அனுப்பியதந்திச் செய்தி எனக்குத்தெரியும்.

இந்தத் தந்தியைப்பற்றி 1930-ம் வருஷம் ஜூலை மாதம் சிம்லாவில் இந்தியா சட்டசபை மண்டபத்தில் அறிந்தேன். நான் சிம்லாவைவிட்டு 9-ந்தேதிபுறப்பட்டேன். சிம்லாவில் என்வேலை முடிந்துவிட்டது. எனக்கு உடம்பு சரியாயில்லை. ஆகையால், 9ந் தேதி புறப்பட்டேன். அந்தத்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்த வியாசம் வாதியால் எழுதப்பட்டதென்று அறிந்து நான் வருத்தப்பட்டேன். ராமனாதன் செட்டியார் சொல்லுகிறபடி வாதிஆடுவார். இந்தவியாசம் கூட ராமனாதன் செட்டியார் தூண்டுதலின் பேரில்எழுதியிருக்கலாம்.

இதற்குப் பிறகு வாதியை நான் எம். சி. டி. எம்.சிதம்பரம்செட்டியார்

வீட்டில் சந்தித்திருக்கலாம். என்பங்காளிகள் வீட்டுக்கலியாணங்களிலும் சந்தித்திருக்கலாம். எனக்கு ஞாபகமில்லை, அந்த சமயத்திலாவது, வேறெந்த சமயத்திலாவது நான்அந்த வியாசத்தைப்பற்றி வாதியோடு பேசவில்லை. அவர் "தமிழ் நாடு" என்ற பத்திரிகையில் எழுதிய வியாசத்திற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி செய்ய நான் முயற்சிக்கவே இல்லை.

என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளாவிட்டால், நான்அவருக்குத் தீங்கிழைப்பேனென்று வாதியிடமோ, வேறு யாரிடமோ சொல்லவில்லை. எனக்கு சித. அள. வீர. சிதம்பரம் செட்டியாரையும்,பி.எல்.எம்சிதம்பரம்செட்டியாரையும்தெரியும். எனக்குக் கண்ட்ரமாணிக்கம் எம். எஸ். பி. சுப்பையா செட்டியாரைத் தெரியாது. இவர்கள் மூலமாக நான் வாதிக்குஒரு செய்தியும் அனுப்பவில்லை. வியாசம் வெளியானதைப்பற்றிஇவர்களில் ஒருவர் மூலமும் வாதிக்கு நான்எச்சரிக்கையோ, புத்திமதியோ, சொல்லி அனுப்பவில்லை. நான் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, வாதி, சோ. ராம. அரு. ராமனாதன் செட்டியாரோடு சேருவதைத் தடுக்க முயற்சிக்கவில்லை. நான் வாதியையும், பிரிப்பதற்கு ஒரு போதும் முயற்சிக்க வில்லை.

எனக்கு திவான் பகதூர் முருகப்ப செட்டியாரைத் தெரியும். நான் 1930-ம் வருஷம் ஜுலை மாதம் 30ந் தேதி அவரைச் சென்னையில் சந்திக்கவில்லை. 'தமிழ்நாடு' என்ற பத்திரிசையில் வெளிவந்த வியாசத்தைப் பற்றி சென்னையில் நானும்அவருடன் பேசவில்லை; அவரும்என்னுடன் பேவில்லை 1930ம் வருஷம் ஜுலைமாதத்திலோ, வேறு எந்த சமயத்திலோ அந்த வியாசம வெளி வந்ததற்காகவோ, அல்லது வேறுகாரணத்திற்காகவோ, வாதிக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்று நான்அவரிடம் சொல்லவில்லை. வாதிக்குப் பாடம்கற்பிப்பதைப்பற்றி நான் அவருடன் பேசவேஇல்லை.

9-ந் தேதி சிம்லாவிலிருந்து புறப்பட்டு ஜுலை மாதம் 12-ந் தேதி சென்னைக்கு வந்து சேர்ந்தேன். நான் சென்னைக்கு காலையில் வந்தேனா அல்லது மாலையில் வந்தேனா, என்பது ஞாபகமில்லை. நான் ஜுரத்தினாலும், வயிற்றுக் கோளாறினாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு உடனே சௌஸ்தமாகி விடவில்லை. சென்னைக்கு வந்த பிறகு 3 வாரங்கள் உடம்பு அசவுக்கியமாயிருந்தேன். நான் நடமாட்டமில்லாமல் படுத்த படுக்கையாயிருந்தேன். நான் என்னுடைய காரியங்களை கவனிக்கும்படியான நிலைமையிலில்லை. டாக்டர்கள் உத்தரவின்படி நான் ஒருவரையும் பார்க்கவுமில்லை. எனக்கு டாக்டர் ரங்காச்சாரியும், டாக்டர் வாசுதேவ ஐயங்காரும் டாக்டர்கள். அந்தக்காலத்தில் நான் திவான் பகதூர் முருகப்ப செட்டியாரைப் பார்க்கவில்லை. 1930ம் வருஷம் ஜுலை மாதத்திலோ, அல்லது நான் அசவுக்கியமாயிருந்தபொழுதோ,முருகப்ப செட்டியாரின் பங்களாவாகிய "லக்ஷ்மி விலாசத்"திற்குப் போகவில்லை. வாதி என்னிடம் வந்து ராமையா வியாஜ்ஜியத்தைப்பற்றிப் பேசவேயில்லை (ஓ. எஸ். 109-30) ராமையா செட்டியார் கேட்கிறபடி நான் செய்து விடுவதாக எனக்கும், வாதிக்கும் பேச்சு நடந்ததே இல்லை. யார் சார்பாகவும் என்னிடம் வந்து பேசுவதற்கு வாதிக்கு சந்தர்ப்பமே கிடையாது.

வாதி மேல் நடந்த ஒரு கிரிமினல் வழக்கைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வழக்கை நான் தூண்டினேனென்றோ, பணம் கொடுத்தேனென்றோ, நடத்தினேனென்றோ சொல்லுவது உண்மையல்ல. அந்த வழக்கிற்கு நான் உதவி புரியவில்லை. அந்த வழக்கில் நான் அக்கறை எடுத்துக் கொள்ளவுமில்லை, பங்கெடுத்துக் கொள்ளவுமில்லை.

கானாடு காத்தானிலுள்ள எம். சி. டி. எம். சிதம்பர செட்டியார் வீட்டில் புதுமைச் சடங்கு நடந்தது. அது 1931-ம் வருஷம் ஜனவரி மாதம் 25-ந் தேதியாயிருக்கலாம். திவான் பகதூர் முருகப்ப செட்டியார் அந்தச் சடங்குக்கு வந்திருந்தாரா இல்லையா வென்பதைப் பற்றி எனக்கு ஞாபகமில்லை.

இந்த வழக்கில் முதல் பிரதிவாதியான முருகனை எனக்குத் தெரியும். அவன் என்னிடம் வேலைக்கிருந்தது கிடையாது. இப்பொழுதும் இல்லை. வாதி கைது செய்யப்பட்ட இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு அவர் மீது கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். 1931-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் வந்த மாட்டுப் பொங்கல் தினம் எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று நான் கானாடு காத்தானிலிருந்தேன். மாட்டுப்பொங்கலுக்கு மறுநாள் நான் திவான் பகதூர் முருகப்ப செட்டியாரைப் பார்க்கவில்லை. ஜனவரி மாதம் 16ந் தேதியோ, அதற்குப் பிறகோ, நான் வாதிக்குப் பாடம் கற்பித்து விட்டதாக திவான் பகதூர் செட்டியாரிடம் சொல்லவில்லை. சிதம்பரம் செட்டியார் வீட்டில் புதுமைச் சடங்கு நடக்கிறதென்றோ அல்லது அதற்கு வாதியை அழைக்கக் கூடாதென்றோ, நான் சொல்லவில்லை; ஜனவரி மாதம் 16ந் தேதி நான் கானாடு காத்தானிலிருந்தேன். அதற்குப் பிறகு நான் கானாடு காத்தானில் 1 வாரமிருந்தேன். சிதம்பரம் செட்டியார் வீட்டில் நடந்த புதுமைச் சடங்குக்குப் போயிருந்தேன். புதுமை தினத்திற்கும் ஜனவரி, 16ந் தேதிக்கும் இடையே நான் ஒரு நாள் சென்னைக்குப் போய்விட்டுப் புதுமைக்குத் திரும்பி வந்து விட்டேன். எங்களுடைய தாயாதிகளும் பங்காளிகளும் அநேகர் புதுமைக்கு வந்திருந்தருந்தனர்.

வாதி கைது செய்யப் பட்டிருக்கிறாரென்றும், அவரை அழைக்கக் கூடாதென்றும் புதுமை வீட்டில் நான் ஒருவரிடமும் சொல்லவில்லை. "நீங்கள்தான் இவ்வளவுக்கும் காரணம். அவரை அழைப்பதற்கு நீங்கள் ஆக்ஷேபனை செய்யக்கூடாது" என்று அங்கிருந்தவர்கள் என்னிடம் சொன்னார்களென்பதுஉண்மையல்ல.

நான் புதுமைக்காக அந்த வீட்டிற்குப்போன பொழுது வாதி ஏற்கனவே அங்கிருந்தார். எஸ். ஏ. ஏ. அண்ணாமலை செட்டியார் என் பங்காளிகளில் ஒருவர். மாட்டுப் பொங்கல் கழித்து 4, 5 தினங்களுக்குப் பிறகு நான் அவரைச் சென்னையில் சந்தித்தேனென்பது உண்மையல்ல. ராமனாதம் செட்டியாரோடு சேர்ந்து கொண்டதற்கும் என்னைப் பற்றி "தமிழ் நாடு"வில் எழுதியதற்கும், நான் முருகன் மூலமாக வாதி மீது கிரிமினல் வழக்குக்குத் தொடர்ந்து வாதியை அவமானப்படுத்தி விட்டேன் என்று சொன்னதாகக் கூறுவதும் உண்மையல்ல. அதற்குப் பிறகு நான் எந்த சமயத்திலாவது அவரிடம் இது மாதிரி சொன்னதாகச் சொல்லுவதும் உண்மையல்ல. ராமனாதம் செட்டியாரோடு சேருபவர்களுக்கெல்லாம் இது ஒரு எச்சரிக்கையாயிருக்கட்டும் என்றும் நான் அவர் மூலம் சொல்லவில்லை. கானாடு காத்தானில் ஒரு வாரம் தங்கிவிட்டு நான் ஒரு நாள் சென்னைக்குச் சென்றேன். (தொடரும்) "தினமணி"

## ஈ.வெ. இராமசாமி.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் 15-11-34ந் தேதி ஈரோட்டிலிருந்து புறப்பட்டு காரைக்குடி வழியாக திருக்கோஷ்டியூருக்கு 16-11-34ந் தேதி சென்றார். அங்கு அன்று நடைபெற்ற சாரதா வாசகசாலை திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்துவிட்டு 17-1134ந்தேதி ஈரோடுவந்து சேர்ந்தார். ஷை விழா நடவடிக்கை அடுத்தவாரம் வெளிவரும்.

## ஈரோடு முனிசிபாலிட்டி குழந்தைகள்— சுகாதார வாரக் கொண்டாட்டம்.

நவம்பர் மீ 19ந் தேதி முதல் 26ந் தேதி வரை ஈரோடு முனிசிபல் சங்கத்தின் ஆதரவில் சுகாதார வாரக் கொண்டாட்டம் நடத்தப்படும். இந்தக் காலத்தில் ஈரோடு தாலூக்கா போர்டு மண்டபத்தில் கல்வி சுகாதாரகாட்சிகள் நடைபெறும்.

நிகழ்ச்சிக் குறிப்பு

19ந் தேதி காலை $7\frac{1}{2}$ முதல் 11 வரை குழந்தைகள் ஊர்வலம், மாலை 5 மணிக்கு கல்வி சுகாதார கண்காக்ஷி திறப்புவிழா மாலை 7 மணிக்கு சத்தியமங்கல ரோட்டு சக்கிலியர் பாகத்தில் சினிமா காட்சி.

20ந் தேதி6-30 முதல் 8-30 வரை சேரிகள் சுத்தம் செய்தல், குழந்தைகள் பாதுகாப்பு ஸ்தலங்களை பார்வை இடுதல் 9 மணிக்கு அது விஷயமாக தோழர்வர்க்கிஸ்அம்மாள்தலைமையில் தோழர்கள் ராஜநாயகம் அம்மாள் ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் உபன்யாசம்.

இரவு 7 மணி முதல் 8 மணி வரை அலிசவுக்கில் தோழர் ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் தலைமையில் படக்காட்சியும், தோழர்கள் டாக்டர் ஆர். வி. என். நாயுடு, ராஜகோபாலய்யர் உபன்யாசங்கள்.

21ந் தேதி புதன்கிழமை காலை 6-30 முதல் 9 மணி வரை சத்தியமங்கலம் ரோட்டு ஆதி திராவிடசேரி சுத்தம் செய்தல் போட்டிப் பந்தயங்கள் தோழர் பாபிலி துரை தலைமையிலும் அவரது மனைவியாருடையவும், ராவ் சாகிப், ராஜா பிள்ளை அவர்களுடையவும் கண்காணிப்பிலும் நடைபெறும்.

இரவு 7 முதல் 8 வரை தோழர் எம். சிக்கய்ய நாயக்கர் அவர்கள் தலைமையில் சத்தியமங்கலம் ரோட்டு முனிசிபல் ஸ்கூலில் ஒரு படக்காட்சியும், அது சம்பந்தமாக தோழர்கள் மீனாட்சிசுந்திர முதலியார் ஜே. அனுகூலம் ஆகியவர்களின்உபன்யாசமும்.

22ந் தேதி தோழர் நரசிம்மாச்சாரியார் தலைமையில் தோழர்கள் டாக்டர் வர்க்கீசும், டாக்டர் வெங்கிடாசலய்யரும் சுகாதார உபன்யாசம்.

மாலை 6-30 முதல் 7-30 வரை பார்க் பாலஸ் கொட்டகையில் சுகாதார சம்பந்தமான இலவச சினிமா காட்சி.

23ந் தேதி வெள்ளிக்கிழமை பெண்கள் தினம் காலை 8 முதல் 10 வரை பெண்களுக்கு மாத்திரம் கண்காட்சி சாலையில் அனுமதி.

டவுன் எலிமென்ட்ரி பாடசாலையில் குழந்தைகள் கண் காட்சி.

மாலை 4 முதல் 5 வரை ஸ்கவுட் தேகப்பயிற்சி செய்து காட்டுதல்.

மாலை 6 முதல் 8 வரை ஈரோடு சரஸ்வதி ஹாலில் சுகாதார நாடகம். இதற்கு ரிவனியு டிவிஷனல் ஆபீசர் தோழர் எம். சீனிவாசாச்சாரியார் தலைமை வகிப்பார்.

மாலை 7 மணிக்கு ரயில்வே காலனியில்படக்காட்சி. தோழர்கள் டாக்டர் வர்க்கீஸ் டாக்டர் ஆர். வி. என். நாயுடு இவர்களின் உபன்யாசங்கள்.

24ந் தேதி சனிக்கிழமை மாலை 3 முதல் 7 மணி வரை கனம் கல்வி மந்திரி திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் பந்தய விளையாட்டும், அதற்கு கனம் மந்திரியால் சன்மானம்வழங்குதலும் நடைபெறும்.

இரவு 7 முதல் 8 வரை நடராஜ ஹாலில் சினிமா காட்டப்படும்.

# யுத்த எதிர்ப்பு தினம்.

## லாகூரில் கொண்டாட்டம்.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட பஞ்சாப் காங்கிரஸ் அபேதவாதக் கட்சியின் முதலாவது பொதுக்கூட்டம் 11-11-34ந் தேதி லாகூர் லாலா லஜபதி மண்டபத்தில் நடைபெற்றது. இது காங்கிரஸின் புதிய சட்டசபைப் பிரவேசவேலைத் திட்டத்தைக்கண்டிப்பதற்காகக் கூடியது. வந்தே மாதரம், பீப்பிள் என்ற பத்திரிகைகளின் மானேஜிங் டைரெக்டரான லாலா பிரோஸ்சந்து அக்கிராசனம் வகித்தார்.

காங்கிரசின் சட்டசபைப் பிரவேசமும், காந்தியாரின் கிராமப்புனருத்தாரண திட்டமும் சுயராஜ்யம் அளிக்க வல்லதல்ல.

புரொபஸர் பிரிஜ் நாராயணர் தாஸ் இக்கூட்டத்தில் பேசியவர்களுள் முக்கியஸ்தராக இருந்தார். அவர் காங்கிரஸின் சட்டசபைப்பிரவேச வேலைத்திட்டத்தையும் கிராமப் புனருத்தாரணத் திட்டத்தையும் கண்டித்து இரண்டும் சுயராஜ்யம் அளிக்க வல்லதல்ல என்று கூறினார். அவர் பேசியதாவது:—"காந்திஜியின் புதிய எண்ணமும் பிரிட்டிஷ் பாலிஸ்டி கட்சித் தலைவர் ஸர் ஆஸ்வால்டு மாஸ்லி எடுத்துரைத்த எண்ணங்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. ஸர் ஆஸ்வால்டு மாஸ்லி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் விவசாயத்தையும் கிராமக் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்யாமல் அசட்டை செய்து விட்டது பற்றி வருத்தம் தெரிவித்தார். ஆஸ்வால்டு மாஸ்லி இந்தியாவில் பெரும் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதை ஆட்சேபித்ததற்கு அவை பிரிட்டிஷ் கைத்தொழில்களுடன் போட்டி போடுவதே முக்கிய காரணமாகும். இப்படியிருப்பினும் அவரது நோக்கமும் மகாத்மா காந்தியின் நோக்கமும் ஒன்று தான். தேசத்திற்கு வேண்டியது தேசிய ஒற்றுமைதானாகும். பொருளாதார நலத்தை ஆதாரமாகக் கொண்டு முயன்று பார்த்தால் தான், தேசிய ஒற்றுமை ஏற்படுவது சாத்தியம். கிறிஸ்துவமதத்தைத் தழுவுவதன் மூலம் இந்தியா ஒற்றுமையை அடைய முடியுமென்று லாகூர் பிஷப் தமது ரேடியோப் பிரசங்க மொன்றில் யோசனை கூறியிருக்கிறார். ஆனால் தற்போது இந்தியர் கிறிஸ்துவராகி வருகின்ற விகிதாசாரத்தைக் கொண்டு பார்த்தால் பஞ்சாப் தனது வகுப்புப்பிரச்சினையை அந்தப் பரிகார மூலம் தீர்த்துக்கொள்ளுவதற்கு 146 வருஷங்களாகும். தற்பொழுது அபேதவாத முறையேபரிகாரமாகும். காங்கிரஸ் மகா சபை கூடிய சீக்கிரம் அபேதவாதக்காங்கிரஸாகிவிடும். முதலாளிவர்க்க காங்கிரஸும் ஏற்படக்கூடும், ஆனால் பாமர ஜனங்களின் அபேதவாதக் காங்கிரஸ் தான் உண்மையில் தேசிய காங்கிரஸாக இருக்கும்."

இக்கூட்டத்தில் யுத்தத்தைக் கண்டிப்பதாகவும் யுத்தமானது சில முதலாளிகளின் நலத்திற்காக மேற்கொள்ளப்படுவதால் யுத்தத்தை ஆதரிக்கக்கூடாதென்று சொல்லும் தீர்மானத்தை ஜனாப் ஆமத்தீன் பிரேரித்தார்.

அவர் நவம்பர் 11-ந் தேதியை சமாதானத்திற்கான தினமாகக்கொண்டாடுவது வெறும் கேலிக்கூத்தேயாகும். ஏனெனில் அன்றையதினமானது மகா யுததத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கைகால்களை முடமாக்கிக் கொன்றதை ஞாபகப்படுத்தும் தினமாகவே இருக்கிறது. என்று பேசினார் அபேத வாதஸ்தாபனங்களைச்சட்ட விரோதமானதென்று சர்க்கார் அறிவித்ததைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அக்கிராசனர்பஞ்சாப் அபேதவாதக் கட்சியைப்பற்றி ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் தவறான செய்திகளைப் பரப்புவதை எடுத்துக்கண்டித்தார். அவர் இதை "எதிர்பார்க்கப்பட்ட வியாதி" என்று சொன்னார்.

(சுதேசமித்திரன்)

---

# யூனியன் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்கள்.

### தரங்சப்பாடி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டுக்கு தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக 10-11-34ல் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் தோழர்கள் ராஜூதுரை செட்டியார் தலைவராகவும், ஸ்ரீநிவாசலு நாயடு உபதலைவராகவும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### தென்காசி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் விசேஷக்கூட்டம் 10-11-34-ம் தேதி நடைபெற்றது. அதில் தோழர் சங்கர நாராயண பிள்ளை அதிகப்படியான ஓட்டுகளால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்

### ஏர்வாடி,

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டமொன்று 8-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் ஒ. நா. முகமதுகனி தரகனார் தலைவராகவும், தோழர் முகமது அலிமலுக்கு உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### ராமேஸ்வரம்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டமொன்று 11-11-34ல் நடைபெற்றது அதில் தோழர் பீமாசங்கர பட்டர்ஜீ தலைவராகவும், தோழர் டி. எஸ். ராமய்யர் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பாமபன்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 11-11-34ல் நடைபெற்றது. அதில் கார்குடி உரத்தூர் ஜமீன்தார் ஜனாப் பெ. ரி. மு. கா. முகமது அப்துல் ரகிமான் மரைக்காயர் அவர்கள் தலைவராகவும், ஜனாப் எஸ். எம். முகைதின் குப்பைராவுத்தர் உபதலைவராகவும்தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### தனுஷ்கோடி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 11-11-34ல் நடைபெற்றது. அதில் பிரபல வர்த்தகரான ஜனாப் எம். நாகூர் மீராசாகிப்பகதூர் அவர்கள் தலைவராகவும், தோழர் பொன்னுரங்கம் நாயுடு உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### அல்லி நகரம்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 7-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் எம். ஏ. ஸ்ரீரங்கராஜு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### திருச்செங்கோடு.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம 9-11-34ல் நடைபெற்றது. அதில் டி. எஸ். வெங்கட்ட ராமய்யர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### மணச்ச நல்லூர்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 8-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் வீ. ரங்கசாமி செட்டியார் தலைவராகவும், தோழர் வி. பொன்னுசாமி முதலியார் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

### திருக்குருங்குடி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 9-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர்கள் என். சீனிவாசக மய்யங்கார் தலைவராகவும், எஸ். வீ. பிரவி பெருமாள் பிள்ளை உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

### திருவையாறு.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 9-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் வைத்தியநாத ஐயர் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைவராகத்தேர்ந்தெடுக்கப் பட்டார்.

### சாத்தூர்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 8-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் ஆர். கொட்டமனைக் கோனார் தலைவராகவும், தோழர் செக்கநாடார் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

### கல்லிடக்குறிச்சி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 8-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் கே. ராமலிங்கமையர் தலைவராகவும், தோழர் சுந்திரம் பிள்ளை உபதலைவராகவும்தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### கோவில்பட்டி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 9-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் என். சங்கரலிங்க ரெட்டியார் தலைவராகவும், தோழர் மாரியப்ப செட்டியார் உபதலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

### சீர்காழி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 9-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் எஸ். வேதகிரி முதலியார் தலைவராகவும், தோழர் ஜனார்த்தன சாஸ்திரி உபதலைவராகவும்தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

### சூரமங்கலம்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 9-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் அதௌலா சாகிப் அவர்களும், தோழர் கணபதி சாஸ்திரியும் போட்டி போட்டார்கள். இருவருக்கும் சமமாக மூன்று ஓட்டுகள் கிடைத்தது. சீட்டுக் குலுக்கிப் பார்த்ததில் அதௌலா சாகிப் அவர்களே தேர்ந்தெடுக்கப் பட்டார்.

### தேவதானப்பட்டி.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம 9-11-34ல் நடைபெற்றது. அதில் தோழர் எஸ். ராமசாமி பிள்ளை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

## தோழர் சிதம்பரம் ரங்கம்மாள்.

### மலாய் நாட்டுக்கு விஜயம்.

சுயமரியாதை இயக்கத் தோழர்களான சிதம்பரம்—ரங்கம்மாள் ஆகிய இருவரும் 10-11-34ந் தேதியன்று நாகையிலிருந்து புறப்பட்ட கப்பலில் தங்கள் நண்பர்களுடன் மலாக்காவுக்குப் பிரயாணமானார்கள்.

---

## ஈரோடு முனிசிபாலிட்டி.

### கல்வி மந்தரிக்கு வரவேற்பு.

இம்மாதம் 24-11-34ல் இவ்வூருக்குவரும் கல்வி மந்திரிகனம் எஸ். குமாரசாமி ரெட்டியாரவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுப்பதென 15-11-34ந் தேதி நடந்த முனிசிபல் கூட்டத்தில்ஏகமானதாக தீர்மானிக்கப்பட்டது.

# பகுத்தறிவு.

ஈரோடு, 1934-ஸு நவம்பர்-மீ 18-உ


## தோல்வி ஆனால் நன்மைக்கே.

:0:

சென்றவாரம் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் இயக்க சார்பாய் நிறுத்தப்பட்ட அபேக்ஷகர்களும்— பார்ப்பனரல்லாதார் இயக்கப்பிரமுகர்களால் ஆதரிக்கப்பட்ட அபேக்ஷகர்களும் அனேகமாக எல்லோரும் தோல்வி என்பதை அடைந்து விட்டார்கள். தோல்வி என்றால் நல்ல பரிசுத்தமான— பாதாளத்துக்குக் கொண்டு போகும்படியான தோல்வி என்று சொல்லத்தக்கவண்ணம் தோல்வி அடைந்திருக்கிறார்கள் என்று தான் சொல்லவேண்டும்.

பார்ப்பனரல்லாதார் சார்பாய் வெற்றி, வெற்றி, வெற்றி என்று வீரம்பேசிய நமதுவாயும், கையும் வெட்கப்படத்தக்க தோல்வி என்று சொன்னால் தலை குனிந்து பொருத்துக்கொள்ள வேண்டியது தான். அதற்குக் காரணமும், சமாதானமும் பதினாயிரம் இருந்தாலும் தேர்தல் முடிவு தோல்வி தான் என்பதில் சிறிதும் ஆக்ஷேபணையோ, விவகாரத்துக்கு இடமோ இல்லை என்பதே நமதபிப்பிராயம். அதுவே நம் வீரத்துக்கு அறிகுறியாகும்.

எனவே நல்ல தோல்வி அடைந்துவிட்டோம் என்பதை ஒப்புக்கொள்ளத்தக்க தைரியம் நம் எல்லோருக்கும் இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஆனால் இத்தோல்வியின் பயன் நாம் வெற்றி அடைந்தால் எவ்வளவு நன்மை ஏற்படுமோ அதை விடப் பல மடங்கு அதிகமான நன்மை ஏற்படப் போகின்றது என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இன்று ஒரு சமயம் நமக்கு வெற்றி கிடைத்திருந்தால் கூட பின்னால் பெரியதொரு தீமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஏனெனில் நம்முடைய மமதையும், அலக்ஷிய புத்தியும், அளவுக்கு மீறிய முரட்டுத் தைரியமும் வெகுகாலத்துக்குத் தலைதூக்க முடியாத பாதாளத்தில் நம்மைக்கொண்டு போய் அழுத்தும்படி செய்தாலும் செய்யக்கூடும். ஆதலால் இந்தத்தோல்வியால் முழுகிப்போன காரியம் ஒன்றும் இல்லை. பின்னால் லாபமே இருக்கிறது.

தோழர் ஷண்முகத்திற்கு ஏற்படப்போகும் முற்போக்கும், அவரால் மக்களுக்கும், நாட்டிற்கும் ஏற்படக்கூடிய நன்மையும் பெருமையும் அவருக்கு இந்த இந்திய சட்டசபைத் தேர்தல் முடிவையேபொருத்திருக்கவில்லை.

தேர்தல் என்பது சூதாட்டத்திற்கொப்பானது. சூதில்ஏற்படும் வெற்றியும்,தோல்வியும் மனிதனுடைய பெருமையையோ, புத்திசாலித்தனத்தையோ சக்தியையோ பொருத்ததல்ல. "வெற்றியா" "தோல்வியா" என்கின்ற வெறும் உச்சரிப்பை மாத்திரமே பொறுத்ததாகும்.

இந்தத் தேர்தல் சூதில் சூட்சியையும், வஞ்சகச் செயலின் சதிகளையும் தாண்டி ஒருவர் வெற்றி பெறுவிட்டால் அவருடைய யோக்கியதையே போய்விடுமென்றால்- அப்படிப்பட்ட அவரால் மக்களுக்கும், நாட்டிற்கும்ஏற்படக்கூடிய நன்மையே போய்விடுமென்றால் அப்படிப்பட்டவர் இருப்பதும் ஒன்று தான். இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான்.

ஆதலால் தோழர் ஷண்முகம் தோல்வியானது வெட்கப்படுவதற்குத் தகுதியானது (ஆனால் படிப்பினைக்குஇன்றியமையாதது) என்று சொல்லிக்கொள்ளலாமே ஒழிய விசனப்படத்தக்கதல்ல என்பதோடு பிற்கால வாழ்வுக்கு பெரிதும் நம்பிக்கை கொள்ளத்தக்க அளவு பயன்படக்கூடியது என்றும் சொல்லலாம்.

தோழர் ஏ. ராமசாமி முதலியாரின் தோல்வியும் அதுபோலவே தோழர் ராமசாமிமுதலியார் மாத்திரமல்லாமல்பார்ப்பனரல்லாதார் சமூகமேவெட்கப்படத்தக்க மாதிரியான தோல்வியே ஒழிய எவரும் சிறிதும் விசனப்படத்தக்கதோல்வி அல்ல என்பதே நமது பளிங்கு போன்ற அபிப்பிராயம்.

1926ம் வருஷத்திய சென்னை சட்டசபைத்தேர்தலில் பார்ப்பனரல்லாதார் நெஞ்சம் திகிர் திகிர் என்று திடுக்கிடும்படியான தோல்வி சப்தங்கள் காது செவிடுபடும்படியாகவும், வானமளாவி இடரும்படியாகவும் தோல்விகள் ஏற்பட்டன.

காங்கிரசுக்காரர்களை கவர்னர் பிரபு கூப்பிட்டுமந்திரிசபை அமைக்கும்படி கேட்கத்தகுந்த வெற்றிகள் காங்கிரசுக்கு ஏற்பட்டன.

இன்றையநம்தோல்விக்கு பார்ப்பனர் நடந்து கொண்டது போலவே அன்றைய தோல்விக்கும் மக்களுக்கு புகையிலை வழங்கினார்கள். அதுவும் உண்மையிலேயே அதுசமயம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தாரும், மற்றும் வெளியிலுள்ள பார்ப்பனரல்லாதாரும் வெட்கப்படத்தக்க தோல்வி தான். ஆனால் அதனால்—அப்படிப்பட்ட தோல்வியால் பார்ப்பனரல்லாத சமூக மக்களுக்கும்—அவர்கள் இயக்கத்துக்கும் ஏற்பட்ட கெடுதி என்ன? பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கும், இயத்துக்கும் பிறவி எதிரிகளாய பார்ப்பனர்களுக்கும், அவர்களது இயக்கத்துக்கும் ஏற்பட்ட நன்மை என்ன? என்பதைக்கொண்டு இன்றைய தோல்வியின் பயனை கணித்துப்பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

அரசாங்கத்தாரின் சம்பள சேவகம், அடிமை உத்தியோகம், அவற்றில் மேல்பதவிகள் என்பவை போன்ற "பெருமை"கள் அல்லாமல் ஜனப்பிரதி நிதித்துவம் (பொது ஜனங்களுக்காக பதவி வகித்தல்) என்பது போன்ற காரியங்களில் ஒரு பார்ப்பனராவது தலை காட்ட முடிந்ததா என்று பார்த்தால் அவர்கள் வெற்றி பெற்றதின் யோக்கியதை விளங்கி விடும்.

1915, 16ம் வருஷத்திய டாக்டர் நாயர், தியாகராய செட்டியார் ஆகியவர்கள் தோல்விபார்ப்பனரல்லாதார் இயக்கத்தை உண்டு பண்ணிற்று.

1926ம் வருஷத்திய தோல்வியால் தான் அரசாங்க உத்தியோகத்திலும், ஸ்தலஸ்தாபனங்களிலும் அரசியலிலும் மற்றும் காங்கிரஸ் உள்பட பொது ஜன ஸ்தாபனம் என்பவைகளிலும் பார்ப்பனரல்லாதார்-இந்து, முஸ்லீம், தீண்டப்படாதார் முதலிய சமூகம் உள்பட எல்லோருக்கும் பிரதிநிதித்துவம்கிடைத்தது.

1926ம் வருஷத்திய தோல்வி தான் சாரதாசட்டம், பெண்கள் பிரதிநிதித்துவம் முதலியவைகளைக் கொடுத்தது. சென்னை அரசாங்க நிர்வாகசபை பார்ப்பனரல்லாதார் வசமாயிற்று. ஜனப்பிரதிநிதித்துவம் என்னும் பேரால் பார்ப்பனர் கைப்பற்றி இருந்த அனேகம் பதவிகளிலிருந்து பார்ப்பனர்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள். ஜனநாயகத்துவம் என்னும் ஸ்தலஸ்தாபனங்களிலிருந்து அறவே 100க்கு 90 பங்காய் பார்ப்பனர்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள். அதுமாத்திரமல்லாமல் பார்ப்பனக் கோட்டை, பார்ப்பன ஆதிக்கஸ்தலம் என்கின்ற சென்னை தஞ்சை ஆகிய இரண்டொரு இடங்கள் தவிர மற்ற எல்லா இடங்களிலும் இந்திய சட்டசபைக்குக்கூட இன்று ஒரு மொண்டியோ முடமோ கூனோ குருடோ பார்ப்பனரல்லாதாராகத்தான் பார்த்து நிறுத்தவேண்டிய நிலை பார்ப்பனர்களுக்கே ஏற்பட்டது.

இவைகள் எல்லாம் எதனால்? 1926ம் வருஷத்திய "மகத்தான தோல்வியால்" அல்லவா என்று கேட்கின்றோம்.

ஆதலால் இந்தத் தோல்விக்காக ஏன் விசனப்படவேண்டும்? "ஓட்டத்தில் களைத்துப்போனவன் பந்தயத்தில் தோற்றவனுவானே ஒழிய வாழ்க்கைக்கு உதவாதவனாகிவிடமாட்டான்"

இந்த 10, 15 வருஷ காலமாய் பார்ப்பனர்கள் அடைந்து வந்த தோல்வியும், அதிலிருந்து அவர்கள் பெற்றுவந்த படிப்பினையும், வெற்றிக்காக அவர்கள் இந்த10வருஷகாலமாய் செய்துவந்த முயற்சிகளும் தந்திரங்களும், பிளான்களும் அந்த பிரச்சினையின் மீதே தங்கள் சமூகத்தை ஒற்றுமையாக்கிப் பலப்படுத்தி செய்து வந்த கட்டுப்பாடான பிரசாரங்களும் இந்த அளவு வெற்றியையாவது அவர்கள் இன்று கண்டு தீரவேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது.

இதுவரையிலும் பார்ப்பனரல்லாத சமூகத்துக்குள் கோள் ஏற்றிச் சண்டை மூட்டி விட்டு அந்தச்சண்டையைப் பார்த்தே திருப்தியாக மகிழ்ச்சி அடைந்து வந்த பார்ப்பனர்கள் இன்று கண்ட வெற்றிக்கு அதுவும் தோழர் ஷண்முகம் தோற்றுப் போனதைக் கண்ட பார்ப்பனர்கள் வெற்றிக்கொண்டாட்டம் கொண்டாடாமலிருக்க முடியுமா என்பதையோசித்தால் அவர்களது கொண்டாட்டம் மிகவும் சரியானதேயாகும்.

ஆகவே அவர்கள் கொண்டாட்டத்திலிருந்து நமக்கு வேண்டிய படிப்பினையை மாத்திரம் மிக ஜாக்கிரதையாய் எடுத்துக்கொண்டு மற்றதை லட்சியம் செய்யாமல் விட்டுவிட்டு இனி ஆகவேண்டிய விஷயங்களைக் கவனிக்கவேண்டியதே பொறுப்புள்ளவர்களின் கடமையாகும்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் பற்றுக்கொண்டவர்களும், அம்மக்கள் முன்னேற்றதில் கவலைகொண்டவர்களும் இதுவரை எப்படி இருந்து வந்தாலும் இனிமேல்தான் அவர்கள் தங்களை இக்கட்சியின் பேரால் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். அக்கட்சி நன்றாய் பெருமையாய், செல்வாக்காய் இருந்த காலத்தில் தன்னை அக்கட்சித் தூண் என்றும், பிரமுகர் என்றும் சொல்லிக் கொண்டிருந்து விட்டு இன்று அதற்கு தோல்வி ஏற்பட்டவுடன்—ஏற்படும் என்று தோன்றியவுடன் "எனக்கும், அக்கட்சிக்கும் சம்மந்தமில்லை" என்று சொல்லிக்கொண்டு எதிரிகளோடு சேர்ந்து தானும் ஒரு கல்லெடுத்துப்போடுவது என்பது மகா இழிவானதும், பயங்காளித் தனமானதுமான காரியம் என்று வன்மையாய்ச் சொல்லுவோம்.

எதிரிகளிடம் கூலிவாங்கிக்கொண்டு வைபவர்களைப்பற்றியோ, அல்லது பார்ப்பனரல்லாதார் கட்சியில் இருப்பதால் தனது வாழ்வுக்கோ பெருமைக்கோ பயனில்லை என்று கருதி எதிரிகளைத் தஞ்சமடைந்தவர்களைப் பற்றியோ நாம் இப்போது கவலைப்படவில்லை. நமது கட்சியை வைததின் பேரால், நமக்கு துரோகம் செய்ததின் பேரால் அவர்கள் பெற்ற கூலிக்காகவும், அவர்கள் அடைந்த பதவிக்காகவும் நாம் அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம்.

ஆனால் உண்மையில் பார்ப்பனரல்லாதார் சமூக நலத்தில் கவலையாய் இருந்தவர்கள், அல்லது இனிமேல் இருக்கிறவர்கள் வீரமுள்ளவர்களாய் இருந்தால் இப்பொழுதுதான் அவர்கள் தாங்கள் பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ள வேண்டும். அவர்களது வீரத்துக்கும், உண்மை அபிமானத்துக்கும் இதுதான் அறிகுறியாகும்.

வெற்றி ஏற்படும் போது தங்களைப் பார்ப்பனரல்லாதார்கட்சிக்காரர் என்று மார் தட்டுவதும், தோல்வி ஏற்படும்போது எதிரிகள் கூட்டத்திற்குள் புகுந்துகொண்டு கோவிந்தா போடுவதும், கட்சியைக்குறை கூறி வீம்பு பேசுவதும் கீழ் மக்கள் செய்கையேயாகும் என்று மறுமுறையும் சொல்லுகிறோம்.

அன்றியும் பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் தன்னை மனித சமூகத்தில் ஒரு கூட்டத்தாருக்கு கீழானவனாய் மதிக்கப்படுகின்றவன் என்று நாணயமாய் நினைக்கின்ற ஒவ்வொருவனும் பார்ப்பனர்லல்லாதார் கட்சிக்கு கடமைப்பட்டவன் என்பதோடு அக்கட்சியின் உயிர் வாழ்க்கைக்கும், மேன்மைக்கும் உயிரைக் கொடுக்க வேண்டியவனே ஆவான்.

### ஒன்று கேட்கின்றோம்.

நிற்க ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரையும்—காங்கிரசில் கூலி பெற்றோ, பெருமை பெற்றோ, பார்ப்பனர்களால் பூஜிக்கப்பெற்றோ இன்று உயிர் வாழும் ஒவ்வொருபார்ப்பனரல்லாதாரையும்--மற்றும் ஸ்தலஸ்தாபனங்களில் சட்டசபைகளில் அங்கத்தவர், பிரசிடெண்ட், சேர்மென் முதலிய பதவிகளிலும், உத்தியோகத்திலும், வக்கீல் வேலையிலும், டாக்டர் வேலையிலும் இருந்து கௌரவமும், செல்வமும் அடைந்து வரும் பார்ப்பனரல்லாதார்களையும்—சர்க்கார் உத்தியோகத்தில் மந்திரிமுதல் குமாஸ்தாவரையில் உள்ள பார்ப்பனரல்லாதார்களையும்—பத்திரிகை ஆபீசுகளில் பத்திராதிபர்கள் முதல் பத்திரிகை விற்பவர்கள்வரை உள்ள பார்ப்பனரல்லாதார்களையும் — மற்றும்தெருக்களில் திரிந்துகொண்டு இங்கத்திய சேதியை அங்கும் அங்கத்திய சேதியை இங்குமாய் சொல்லிக் கொண்டு உல்லாச உடை உடுத்தி சோம்பேரிகளாய் த்திரியும் அண்ணாத்தைகளையும் ஒன்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார் (ஜஸ்டிஸ்) கட்சி என்பதாக ஒருகட்சி தென்னிந்தியாவில் சுமார் 15 வருஷகாலத்துக்கு முன் தோன்றி இருக்காவிட்டால் அதை ஆரம்பித்தவர்கள் கல்லடி, செருப்படி, மண்ணடி, பேச்சடி பட்டு தங்கள் குடும்பச்செல்வங்களையும், போகபோக்கியங்களையும் தொழில்களையும் துறந்து பார்ப்பனர்களுடைய "சாபத்து"க்கும், அவர்களது பத்திரிகைகளின் விஷமப் பிரசாரத்துக்கும் தலைகொடுத்து அவற்றின் கெடுதிகளை அடைந்து கஷ்டப்பட்டுக்கொண்டும் சிலராவது உழைத்திருக்காவிட்டால் மேல் கண்ட பார்ப்பனரல்லாத ஆட்கள் இன்று இந்த நிலைமையில் இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம்.

பார்ப்பனரல்லாதார் என்கின்ற முறையில் ஒருவன் ஜஸ்டிஸ் கட்சிக்குத் துரோகம் செய்வதும், அதை இகழ்வதும், பழிப்பதும் எதற்கு ஒப்பிடலாம் என்றால் தன்னைப் பெற்று சீராட்டிப்பாராட்டிப் பாலூட்டி வளர்த்த தன் தாயை—தன் வாழ்க்கையில் கவலை கொண்ட வாழ்க்கைத்துணைவியை—உயிர் அனைய காதலியை பிறர் பழிக்கப் பழிகூறுவதையும், தன் சுயநலத்துக்கு அவர்களை துர்வினியோகப் படுத்துவதையும்தான் ஒப்பிட முடியும்.

ஜஸ்டிஸ் கட்சியில் இன்று பெரும்பாலும் அயோக்கியர்களும், சுயநலக்காரர்களும் இருக்கலாம்.

நாணயமில்லாதவர்களும் யோக்கியப்பொறுப்பு இல்லாதவர்களும், சுயநலத்துக்குக் கட்சியைப் பயன்படுத்திவிற்று வாழ்கின்றவர்களும் இருக்கலாம்

காரி உமிழுவதற்குக்கூடலாயக்கில்லாத இழி மக்களும், ஈனர்களும் இருக்கலாம்.

காட்டிக்கொடுத்தவர்களும், துரோகிகளும் இருககலாம்.

ஒருயோக்கியமான அரசாங்கத்தின் நியாய விசாரணையின் மூலம் நடுத்தெருவில் நிறுத்தி ஆளுக்கொரு கல்லால் அடித்துக்கொல்லவேண்டும் என்று தீர்ப்புப்பெறுவதற்குத் தகுதியான துரோகிகளும், சதிகாரர்களும் இருக்கலாம். அவர்களுக்காகவெல்லாம் வாதாடி விடுதலைபெறச் செய்ய நாம் இங்கு (இக்கட்டுரையில்) ஆசைப்படவில்லை. ஏனெனில் எங்கும் அப்படிப்பட்டவர்கள் இருக்கக்கூடும். ஆனால் 3 கோடி மக்களின் சுயமரியாதைக்காகப் பாடுபட என்றே ஏற்படுத்திய ஒரு ஸ்தாபனத்தை அதிலுள்ள இப்படிப்பட்ட சிலர் நடந்துகொள்ளும் காரியத்துக்காக மற்ற யோக்கியமானவர்கள் நன்றி விசுவாசத்தை மறந்து எதிரிகளுடன் சேர்ந்துகொள்ளுவதா என்று தான் கேட்கின்றோம்.

இன்று தென்னிந்தியாவில் காங்கிரசில் ஏதோ சில கிறிஸ்தவர்கள் இருந்தாலும் சரி, சில முஸ்லீம்கள் இருந்தாலும் சரி, சில தாழ்த்தபட்ட மக்கள் இருந்தாலும் சரி, சில ஜாதி இந்துக்கள் முதலிய நாடார்கள், வாணிபச் செட்டியார்கள், நாயக்கர்கள் முதலியார்கள் போன்ற கூட்டத்தார்கள் இருந்தாலும் சரி, அவர்களில் பெரும்பாலோருக்கு காங்கிரசில் என்ன சலுகையின் பேரில் இடமும், போக்கியதையும், விளம்பரமும் வாழ்க்கை வசதியும் கிடைத்து வருகின்றது என்பதை ஒவ்வொருவரையும் பரிசுத்தமான மனதுடன் உணர்ந்து பார்க்கும்படி வேண்டுகிறோம்.

மதிப்பு இல்லாமல், சுயமரியாதை இல்லாமல், மனிதத்தன்மை இல்லாமல், கௌரவ வாழ்க்கை வேலையில்லாமல் செய்யப்பட்டு பல நூற்றாண்டாக வாழ்ந்துவந்த மக்களின் விடுதலைக்காக ஒரு ஸ்தாபனம்ஏற்பட்டு அதன்மூலம் கௌரவமும், பதவியும், மரியாதையும், வேலையும், வாழ்க்கைவசதியும் அடையக்கூடிய நிலை ஏற்பட்டால் அதற்கு அந்த சமூகத்திலேயே எவ்வளவு போட்டி இருக்கக்கூடும் என்பதை நாம் அளவிட்டுச்சொல்ல முடியுமா? இன்றைய நிலையில் இப்படிப்பட்ட போட்டியில் இழுக்கப்பட்ட ஜனங்களில் 100க்கு ஒருவர் இருவரே வெற்றியடையக்கூடும் என்பதும், பாக்கி 98, 99 பேர்களுக்கு அந்த ஸ்தாபனத்தின் மீதும், அதின் நிர்வாகத்தில் உள்ள ஆட்கள்மீதும் அதிருப்தியும்விரோதமும் குரோதமும் பழிவாங்கும் சதிக்குணமும் இருந்து வருவதும் ஆச்சரியப்படத்தக்கதாகாது.

ஆகலால் அப்படிப்பட்டவர்களால் ஏற்படும் கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் தலை கொடுத்து அதன் பயனை அடையத்தயாராய் தைரியத்துடன் இருந்தால் தான் அக்கட்சி நிலைக்கவும். அது யாருக்காக எந்த மக்களுக்காக ஏற்பட்டதோ அச்சமூகத்துக்கு அம்மக்களுக்கு பயனளிக்கவும் முடியுமே ஒழிய மற்றபடி "கட்சி தோற்று விட்டது" இளைத்து விட்டது என்றவுடன் எதிர் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு வையத்துடங்கினோமேயானால் யாதொரு பலனையும் அடைய முடியாது. என்பதோடு நம்மை நாமே இழிவுசெய்துகொள்ளும் மூடவேலையில்—மானமற்ற வேலையில் இறங்கினோம் என்ற முடிவுதான பெறக்கூடும்.

### ஆதலால் நாம் செய்யவேண்டிய வேலை.

தோழர் ராமசாமி முதலியார் தோற்றதற்குக்காரணமும், தோழர் ஷண்முகம் தோற்றதற்குக் காரணமும் கட்சியில் உள்ளவர்களின் கொலைபாதகச் செயலுக்கு ஒப்பான வஞ்சகமும், சதியுமே

காரணம் என்று ஜஸ்டிஸ் பத்திரிகை கூறுகின்றது.

ஜஸ்டிஸ்பத்திரிகையானது இரு தோழர்களும் தோல்வியடைந்த பிறகு இதைக் கூறுகின்றது. ஆனால் இதைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்கள் நியமிக்கப்படும் முன்பே கட்சித்தலைவர்களுக்கும், கட்சிப் பிரமுகர்களுக்கும் சிலர் ஆதாரத்தோடு விளக்கிக்காட்டினார்கள். அதைக்கேட்டு பொப்பிலி ராஜா அவர்கள் சிரித்தாராம்.

அதுமாத்திரமல்லாமல் தோழர் ஷண்முகம் அவர்களிடம் இச்சங்கதியைப் பலர் தெரிவித்து அவர் நம்பியிருந்த ஆட்களைப்பற்றிய நிலையை எடுத்துச் சொல்லி "அவர்களைநம்பாதீர்கள்" என்று சிலர் எடுத்துச்சொன்னார்களாம், அதைக்கேட்டு தோழர் ஷண்முகம் கோபித்து "அப்படியெல்லாம் பார்த்தால் உலகத்தில் ஒரு காரியமும் நடக்காது" என்று சொன்னாராம்.

அதுமாத்திரமல்லாமல்தோழர் ஷண்முகத்துக்கு டெல்லிக்குத் தந்தி கொடுத்து அந்தத்தொகுதியை மாற்றிக்கொள்ளச் சொல்லிப் பல தோழர்கள் கேட்டுக்கொண்டார்களாம். அதற்கும் தோழர் ஷண்முகம் அவர்கள் சென்னைக்கு வந்து சமாதானம் சொல்லுவதாய்த் தெரிவித்துவிட்டு அலட்சியமாய் இருந்துவிட்டாராம்.

இவ்வளவும் தவிர தோழர் ஷண்முகம்மீது தென்னாட்டுப் பார்ப்பனர்கள் மாத்திரமல்லாமல் வடநாட்டுப் பார்ப்பனர்கள் அத்தனைபேரும் பொறாமை கொண்டிருப்பதும், அவர் ஒரு பெரிய அந்தஸ்துக்கு வரப்போகிறார் என்று வயிறெறிந்து கொண்டு இருப்பதும் தோழர் ஷண்முகத்துக்குத் தெரியாததல்ல. இவ்வளவு இருக்கும் போது பாமர மக்களுக்குள் நெருங்கிப்பழகி அனுபோகமுள்ளவர்கள் வார்த்தைகளைத் தோழர் ஷண்முகம் அவர்கள் அலட்சியம் செய்துவிட்டு எதிரியை பஞ்சாங்கம் கேட்டுக்கொண்டிருந்ததே தோல்வியைப்பற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லை என்பதற்கு தக்க ஆதாரமாகும்.

தோழர் ஷண்முகம் அவர்கள் வியாபாரிகளிடத்தில் மெஜாரிடி ஓட்டு பெற்றிருந்தாலும் கூட லேவாதேவிக்காரர்களால் ஏமாற்றமடைந்து விட்டார் என்பது அவரது தேர்தலில் வேலை செய்த அத்தனை பேருக்கும் நன்றாய் தெரிந்த விஷயம்.

லேவாதேவிக்காரர்கள் சார்பாக தென்னிந்தியாவிலேயே லேவாதேவிக்காரர் தலைவராகிய செட்டி நாட்டு அரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களையே மலை போல் நம்பி இருந்தார்.

ராஜா சர் அவர்களுக்கு இருந்த நெருக்கடியான நிலையை உணர்ந்த எவரும் ராஜா சர் மீது இவ்வளவு பொறுப்பும், இவ்வளவு நம்பிக்கையும் வைக்கச் சம்மதிக்கமாட்டார்கள்.

ஏனென்றால் ராஜாசர் அவர்கள் ஒருபெரிய கேஸில்சிக்கிக்கொண்டு அவஸ்தைப்படுகிறார், அந்த கேசுக்கு ஜட்ஜி ஒரு பார்ப்பனர், வக்கீல்கள் பல பார்ப்பனர்கள், வீட்டு வேலை ஆள்கள் கேஸ்காரியம் பார்க்கும் நிர்வாக ஏஜண்டுகள் பார்ப்பனர்கள், அக்கேசுக்கு சாட்சியாக வரும் குட்டிச்செட்டி மார்களின் வக்கீல்கள் காரியஸ்தர்கள் பார்ப்பனர்கள், சௌகரியம் போல் சர்ட்டிபிகேட் கொடுக்கும் டாக்டர்கள்பார்ப்பனர்கள். ராஜா சர் அவர்களின் மந்திரிமார்கள் பார்ப்பனர்கள், அவர் ராஜா சர் ஆவதற்கு விஷமம் செய்யாமல் விட்டு விட்டவர்கள் பார்ப்பனர்கள். இவை யெல்லாம்தவிர செட்டிநாட்டில்ராஜா சர் மீதுபொறாமை கொண்ட செட்டிமார்கள் பலர். ராஜா சர் மீது சில்லரைக்கேசுகள் பல. இவைகளோடு ராஜா சர் அவர்களுக்கு மோக்ஷத்துக்கு வழிகாட்டும் புரோகிதர்களும் எப்படி பார்ப்பனர்களோ, அதே போல் அவரது வாழ்க்கையில் கௌரதையைத் தேடிக்கொடுக்க அவருக்கு வழிகாட்டிகள், அல்லது ராஜா சர் அவர்களால் அக்காரியத்துக்கு நம்பி இருக்கப் பட்டவர்கள் பார்ப்பனர்கள். இந்த நிலையில் ராஜா சர். அவர்களால்ஷண்முகத்துக்கு ஒருநாதொடிந்த ஊசி அளவு உதவியாவது எதிர் பார்த்தால் எதிர் பார்த்தவர்கள் முட்டாள்களா அல்லது ராஜா சர் அவர்கள் சதிசெய்தவர்களாவர்களா? என்பதை ஆலோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறோம்.

எனவே தோழர் ஷண்முகம் அவர்கள் செட்டிநாடு ராஜா சர். அண்ணாமலை அவர்களை நம்பியதால் மோசம் போய்விட்டார். என்றுசொல்லப் படுவதில் இயற்கைக்குமுரண் ஒன்றும்காணோம்.

அது போலவே தோழர் ராமசாமி முதலியார் அவர்கள் தனது தேர்தலுக்கு ராஜா சர். அண்ணாமலையார் குமாரர் குமார ராஜா முத்தையா அவர்களை மலைபோல் நம்பினர். ஆனால் குமார ராஜா முத்தையா அவர்களுக்கு சென்னை மேயர் பதவி மோகம் இருந்தது யாவரும் அறிந்ததேயாகும். அதற்கு தோழர் டாக்டர் நடேச முதலியாரும் ஆசைப்பட்டார். இந்தப் போட்டி பார்ப்பனர்களுக்கு ஒரு நல்ல வேட்டையாகி விட்டது. மேயர் பதவியை விலை பேசி தோழர் சத்தியமூர்த்தி அய்யர் தேர்தல் செலவு முழுவதையும் தோழர் குமார ராஜா தலையிலேயே போடப் பார்த்தார்களாம். இந்த நெருக்கடியில் அகப்பட்ட குமார ராஜா அவர்கள் பகுதி செலவுக்கு ஒப்புக்கொண்டு இரண்டொரு கார் வாங்கிக் கொடுத்து தன் செலவில்—தன் தயவில் கார்ப்பரேஷனுக்கு கவுன்சிலர்களாக வந்த 4, 5 கனவான்களை மாத்திரம் தங்கள் தங்கள் வார்டுகளில் தோழர் சத்தியமூர்த்திக்கு அந்தரங்கத்தில் உதவிசெய்யச் செய்வதாகவும் ஒப்புக் கொண்டார்களாம். இது உண்மையாய் இருந்தால் இதற்கு யாரை நோவது?

ராஜா சர். அவர்களுக்கு கேசு அனுகூலமாவதும், குமாரராஜாவுக்கு மேயர் பதவி கிடைப்பதும் முக்கியமானகாரியமா? அல்லது சர். ஷண்முகத்துக்கும், திவான் பகதூர் ராமசாமி முதலியாருக்கும் இந்திய சட்டசபை மெம்பர் பதவி கிடைப்பது முக்கியமா? என்பதை சர். அண்ணாமலை, குமார ராஜா இவர்கள் நிலையில் இருந்து யோசனை செய்து பார்க்கவேண்டுமாய் சர். ஷண்முகம் ராமசாமி முதலியார் ஆகியவர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் யோசித்துப்பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

இந்த லட்சணத்தில் தோழர் ராமசாமி முதலியார் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சி மீட்டிங் தேர்தலில் குமார ராஜாவுக்கு எதிரிடையாக டாக்டர் நடேசமுதலியாருக்கு ஓட்டுச் செய்துவிட்டாராம். அதோடு பார்ப்பனர்கள் குமாரராஜாவுக்கு விரோதமாக மேயராய் நிறுத்துவதற்குத்தோழர் கிரிதாரிதாஸ் என்கின்ற ஒரு சேட்டை கையில் வைத்துக்கொண்டு மிரட்டிக் கொண்டே இருந்தார்களாம். அந்தச்சேட்டும் ஒரு பிரபுவானதால் அவர் 30, 40 ஆயிரம் ரூபாய் வரை மேயர் பதவிக்கு செலவு செய்யக்கூடும் என்று பார்ப்பனர்கள் கட்டி விட்டு விட்டார்களாம். பட்டணத்து வக்கீல்கள் குமார ராஜாவுக்கு C. I. D. கள் போல் இருந்து தோழர் ராமசாமி முதலியாருடன் குமாரராஜவை பேசுவதற்குக்கூட நேரமில்லாமல் செய்துவிட்டார்களாம்.

இந்த நிலையில் அவர்கள்மீது இரண்டு எலக்ஷன் பொறுப்புகளையும் போடுவது என்றால் இப்படிப்பட்ட தோல்வியைத் தவிர வேறு என்ன முடிவு எதிர்பார்க்கக்கூடும் என்று கேட்டுவிட்டு வேறு விஷயத்திற்குச் செல்லுவோம்.

## பார்ப்பனர்கள் யாரையாவது முன்னேறவிட்டிருக்கிறார்களா?

நமது பார்ப்பனோத்தமர்கள் தென்னிந்தியாவில் பொதுவாகச்சரித்திரம் தோன்றிய காலம் முதல் இதுவரை எந்தப்பார்ப்பனரல்லாதாரையாவது (காந்தியைத்தவிர) முன்னேற விட்டிருக்கிறார்களா என்பதை கவனித்துப்பார்த்தால் தோழர் ஷண்முகம் அவர்களின் காலைத் தட்டி விட்டதுஒருஆச்சரியமான காரியமாகாது. (காந்தியாரும் பார்ப்பனர் கைக்குரங்காயிருந்த காரணத்தினாலல்லாது சுதந்திரபுத்தியோடு இருந்ததினாலல்லஎன்பதுஎவருக்கும்தெரிந்ததாகும்) தோழர்கள் அனந்தாச்சாரியார், மாதவராவ், ராமய்யங்கார், ரங்கையங்கார், ரகுநாதராவ், கிருஷ்ணசாமி ஐயர், மணி ஐயர், சிவசாமி ஐயர், சீனிவாச சாஸ்திரி, சி. பி. ராமசாமி, அல்லாடி கிருஷ்ணசாமி, வெங்கிட்டராம சாஸ்திரி, விஜயராக வாச்சாரியார் என்பவர்கள் போன்ற பல பொதுவாழ்வு ஆட்களும், ராமச்சந்திரராவ், வி. டி. கிருஷ்ணமாச்சாரி, ராகவையர், டி. விஜயராகவாச்சாரி, கோபால்சாமி அய்யங்கார் போன்ற சர்க்கார் சம்பள உத்தியோக ஆட்களுமாய் சுமார் நூற்றுக்கணக்கானவர்கள் முன்னேறி பெருத்த பதவி, பெருத்த பட்டம், பெருத்த பணம் அவர்களது பிள்ளை குட்டிகள் சுற்றத்தார் ஆகியவர்களுக்கு நல்ல நிலையில் வாழ்க்கை ஆகியவை அடைந்து வந்திருக்கிறார்கள் — வருகிறார்கள் என்பதுகண்கூடு.

ஆனால் இந்த நிலையில் நமக்குத்தெரிந்த இந்த ஐம்பது வருஷகாலமாய் எந்தப் பார்ப்பனரல்லாதாராவது இருந்திருக்கிறார்களா, இருக்கிறார்களா என்று கேட்கின்றோம். பார்ப்பனரல்லாதார்களில் சிறந்

தவர்களாகிய சர்.சங்கர நாயர், கேசவபிள்ளை, T. M. நாயர், தியாகராஜ செட்டியார் முதலியவர்கள் முடிவில் என்ன கதி யடைந்தார்கள். தேசத்துரோகிகளானர்கள். தோழர் தியாகராய செட்டியார் குடும்பத்துக்கு இன்று சோற்றுக்கே திண்டாட்டம் என்று சொல்லப்படுகின்றது. T. M நாயர் அவர்கள் அழுவாரற்ற பிணமாய்ச்செத்தார், கேசவ பிள்ளை அவர்கள் கடைசி காலத்தில் கெட்ட பேர் வாங்கினவர் என்று சொல்லப்பட்டார், சங்கர நாயர் அவர்கள் எவ்வளவு பெரிய ''தேசீய''வாதி எவ்வளவு பெரிய 'சீர்திருத்த' வாதி, எவ்வளவு பெரிய மூளை சக்தி உடையவர். கடைசியில் ஒரு சாதாரண மனிதராகவே செத்தார், V. கிருஷ்ணசாமி அய்யருக்கு ஞாபகச்சிலை இருக்கிறது. சங்கர நாயருக்கு அவரைப்பற்றி நினைக்க ஒரு காரியத்தையும் காணவில்லை.

பார்ப்பனரல்லாதாரில் சர்வ சக்தியும் உடையவர்கள் இருந்தாலும் அவர்கள் முன்னுக்கு வருவதோ பிரபலம் பெருவதோ என்கின்ற காரியத்திற்கு இந்தப் பார்ப்பனர்கள் ஒருவரையாவது விட்டதே இல்லை விடுவதும் இல்லை

ஆதலால் அவர்கள் சர். ஷண்முகத்தையும், ராமசாமி முதலியாரையும் காலை வாரி விட்டதில் அதிசயமும் இல்லை, இது முதலாவது காரியமுமல்ல என்று சொல்லுவோம்.

இன்றைய தினம் பார்ப்பனர்களுக்கு பின் தாளம் போடும் தோழர் C, R. ரெட்டி எவ்வளவு கெட்டிக்காரர். அவருடைய கதி இன்று பார்ப்பனர்களுக்கு விளக்கு பிடிக்கும் படியாகஆகிவிட்டது. தோழர் சுப்பராயன் அவர்கள் பணம், புத்தி, தகுதி, எல்லாம் இருந்தும் அவரும் இந்தப்பார்ப்பனர்களாலேயே கால் வாரி விடப்பட்டு பார்ப்பனதாசராகி அவரும் சி. ஆர். ரெட்டியும் இருவரும் சேர்ந்து சர் ஷண்முகத்துக்கு தங்களாலான கெடுதியைச் செய்து தோற்கடிப்பதற்கு உதவி செய்யவேண்டியவர்களானர்கள் என்றால் இன்னும் இதற்கு யாரை உதாரணம் சொல்லுவது என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த தேர்தல்கள் விஷயத்தில் சென்னை ஓட்டர்களில் பார்ப்பன ஓட்டர்கள். 4000 பேர்கள் என்றால் அதில் சுமார் 2500க்கு அதிகமாக பார்ப்பன ஓட்டர்கள். சர்க்கார்உத்தியோகத்தில் இருக்கும் இந்த 2500 உத்தியோகப் பார்ப்பனர்கள் ஓட்டில் ஒன்று இரண்டு ஓட்டுகளாவது சத்திய மூர்த்திக்கு விழுகாமல் இருந்திருக்கும் என்று யாராவதுசொல்ல முடியுமா? என்று கேட்கின்றோம். அவ்வளவு உத்தியோகஸ்தர்களும்சர்க்கார்மனிதர்கள் என்று தங்களைத் சொல்லிக்கொண்டுசர்க்கார் ஊதியம் பெற்றுக்கொண்டு காங்கிரசுக்கு என்று சொல்லிக்கொண்டு சத்திய மூர்த்திக்கே தான் ஓட்டு செய்திருக்கிறார்களே தவிர அவருக்கு விரோதமாக யாரும் செய்து விட வில்லை.

ஆகவே பார்ப்பனர்கள் வகுப்பு வாதத்தால் வெற்றி பெற்றார்கள். பார்ப்பனரல்லாதார் அது இல்லாததால் தோல்வி பெற்றார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.

இவைகள் எல்லாம் எப்படியோ போகட்டும். நம்மைப்பொறுத்த வரையில் நாம் இரண்டொரு விஷயம் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறோம்.

''ஜஸ்டிஸ்கட்சிதோற்றதற்கு காரணம் அதற்கு இந்தியா முழுவதையும் பொருத்த ஒரு வேலைத்திட்ட மில்லை. ஆதலால் தோற்று விட்டது'' என்று மெயில் பத்திரிகை எழுதி இருக்கிறது. மற்றப்பார்பனப்பத்திரிகைகள் ''ஜஸ்டிஸ் கட்சி வகுப்பு வாதக்கட்சி ஆதலால் தோற்று விட்டது'' என்றும் ''சர்க்கார் தாசர் கட்சிஅதனால் தோற்றுவிட்டது''என்றும்சொல்லுகின்றன. பாமர ஜனங்களிடையும் இப்படியே பிரசாரங்கள் நடந்திருக்கின்றன.

இதை எப்போதாவது ஜஸ்டிஸ் கட்சி மறுத்துப் பிரசாரம் செய்திருக் கின்றதா என்று கேட்கின்றோம்.

தோழர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் 7-6-34வயில் சென்னையில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் கூட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதமாக மேற்கண்ட மாதிரியான பிரசாரம் பார்ப்பனர்களாலும், அவர்கள் பத்திரிகைகளாலும் அவர்களது கூலிகளாலும் பலமாய் நடந்து வருகின்றது என்றும் அதற்கு சமாதானம் சொல்லி ஆகாவிட்டால் ஜஸ்டிஸ் கட்சி அடுத்த தேர்தலில் கண்டிப்பாய் தோற்று விடும் என்றும் எடுத்துச்சொல்லி இருக்கிறார், (அதை இன்று 15ம்பக்கத்தில் அப்படியே பிரசுரித்திருக்கிறோம்) அதை யார் லக்ஷியம் செய்தார்கள், 4, 5 வருஷகாலமாய் தலைவர் ஸ்தானத்துக்கு போட்டி,ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதம் முதலியவைகளால் பிரசாரமே இல்லாமல் இருந்தால் நம் பாமரமக்கள் எதிரிகளின் புரட்டுகளை எப்படி அறியக்கூடும்.?

ஜஸ்டிஸ்பத்திரிகை (ஒன்றே ஒன்று) ஆங்கிலத்தில் நடைபெருகின்றது.எதிரிகள் பத்திரிகைகள்அனேகம் தமிழிலும்இங்கிலீஷிலும்நடைபெருகின்றன.

பாமர மக்களுக்கோ தமிழ் கூடத்தெரியாது இந்த நிலையில் எவ்வளவு சத்தியவானாய் இருந்தாலும், பலனளிக்கக்கூடியவனாய் இருந்தாலும் எப்படி வெற்றி பெற முடியும்? பூமிக்குள் இருக்கும் புதையலின் மீதுயாராவதுகடன் கொடுப்பார்களா? அது போல் நமது கொள்கைகள் நாம் செய்த வேலைகள், அதனால் ஏற்பட்ட பலன்கள் பாமரஜனங்களுக்கு அறிவிக்கப்படாமல் அவர்களது ஓட்டுகளைப்பெற நாம் எப்படி அருகதை உடையவர்கள் ஆவோம் என்பது நமக்கு விளங்கவில்லை.

தேர்தல் 2 மாதம் இருக்கும் போது கூட கட்சிக்கு தோழர் ஈ.வெ. ராமசாமியால்சமர்ப்பிக்கப்பட்ட திட்டம் ஒத்திப்போடப்பட்டு விட்டது என்றால், கட்சியின் பேரால்பணம், கௌரதை,உத்தியோகம், ஊதியம் பெற்று வாழுபவர்கள் பரிகாசம் செய்தார்கள் என்றால் ஓட்டுப்போட்டதற்காக பாமரமக்கள்மீது குற்றம்சொல்லுவதில் பயன் என்ன என்று கேழ்க்கின்றோம். நம்மிடம் எதிரிகள் புரட்டை கண்டிக்கவோ, வெளியாக்கவே ஆயுதம் இல்லாமல் நிராயுதபாணிகளாய் இருப்பதை எதிரிகள் பயன் படுத்திக் கொண்டால் அது அவர்கள் குற்றமாகுமா? என்று கேட்கின்றோம். சென்றதைப் பற்றி கவலை வேண்டாம்.

அடுத்த தேர்தல்களில் நாம் வெற்றி பெற வேண்டுமானல் ஜஸ்டிஸ் பேப்பரையும், ராஜா சர்களையும், குமார ராஜாக்களையும், மந்திரி மார்களையும் நம்பினால்—அவர்களை எதிர் பார்த்தால் அதோ கதிதான்.

தோழர்கள் முனிசாமி நாயுடு அவர்களாகட்டும், மற்ற இரண்டாவது மூன்றாவதுமந்திரிகளாகட்டும், பரம்பரைராஜபட்டம் பெற்ற ராஜா சர். ஆகட்டும், குமார ராஜா ஆகட்டும், இவர்களும் இவர் போன்றவர்களும் கட்சி பிரசாரத்துக்கு நாளது வரை என்ன செய்தார்கள் என்று யோசித்துப் பார்க்கட்டும்.

இவர்களது சம்பளங்களும் கட்சிச் செல்வாக்கால்—கட்சியைக் காட்டிக் கொடுத்ததால் வெற்றி பெற்ற கேசுகளின் வருமானங்களும் எவ்வளவு லட்சரூபாய்களாக இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கட்டும். இதெல்லாம் பார்ப்பனரல்லாதார் பேர்களால் ஏற்பட்ட கவுரவம், பட்டம், பதவி, செல்வம் அல்லவா? அப்படிப்பட்ட பட்டம், பதவி, அதிகாரம், பணம் ஆகியவை அந்த சமூக பாமர மக்கள் உண்மை அறிவதற்காவது பயன்பட வேண்டாமா என்று எதிர் பார்க்க நமக்கு உரிமை இல்லையா என்று கேட்கின்றோம்.

போனது போகட்டும் இனியாவதுஜஸ்டிஸ் பத்திரிகையை வாரப்பத்திரிகையாகவாவது ஆக்கிவிட்டு தெலுங்கிலும்,தமிழிலும், மலையாளத்திலும், மூன்று காலணா தினசரிப் பத்திரிகைகளும்25 ஜில்லாவுக்கும் பிரசாரகர்களை ஏற்படுத்திகட்சிக்கொள்கையை, திட்டங்களையும் பார்ப்பனர்களின் சூட்சிகளையும் காங்கிரசின் புரட்டுகளையும் வெளியாக்கும் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தால், இப்பொழுது பார்ப்பனர்கள் நிறுத்திய மாதிரி கூட அல்லாமல் நாம் இன்னமும் அதை விட மோசமான ஆட்களை தேர்தலுக்கு நிறுத்தினாலும் இன்று பார்ப்பனர்கள் அடைந்த வெற்றிபோல் நாம் அடையலாம்.

இந்தக்காரியங்களுக்கு பத்திரிகைகளுக்குமாத்திரம் குறைந்தது மாதம் 10 ஆயிரம் ரூபாய் வேண்டும் 5மந்திரிமார்களுக்கு மாதம் ஆளுக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் கொடுத்தால் போதும். ஜஸ்டிஸ்கட்சி தலைமை காரியாலயத்தை சென்னையை விட்டு கிளப்பிவிட வேண்

டும். திருச்சியிலோ, கோவையிலோ அல்லது வேறு தகுதி யான இடத்திலோ வைக்க வேண்டும்'

ஜில்லா பிரசார சங்கம் தஞ்சைஜில்லாவில் வைத்து அதற்காக மாதம் 4000 ரூபாய் வீதம்ஒருவருஷத்துக்கு 50000 ரூபாய் செட்டிநாட்டுராஜாவும், குமாரராஜாவும் கொடுக்க வேண்டும். தோழர் ஈ. வெ. ராமசாமி சமர்ப்பித்த திட்டத்தை கட்சி திட்டமாக ஏற்றுக்கொண்டு இன்றைய அதிகாரத்தில் எவ்வளவு செய்யக் கூடுமோ அவ்வளவும் மக்களுக்குசெய்து காட்டவேண்டும்;

இந்தக்காரியங்கள் செய்யாவிட்டால் இந்த தேர்தலில் புகையிலை வழங்கிய பார்ப்பனர்கள் சென்னை சட்டசபை தேர்தலுக்கு சுருட்டு வழங்கத் தகுதியுடையவர்களாகி விடுவார்களென்பதுஉறுதிஆகையால்இத் தேர்தல் முடிவைப்பற்றி யாரும் கலங்கவேண்டியதில்லை வாலிபர்கள் மனம் தளர வேண்டியதில்லை. வகுப்பு வாதம் என்று எதிரிசொல்வதைக்கண்டுஅஞ்சவேண்டியதில்லை.

வகுப்புகஷ்டங்களைஒழிப்பது தான் நமது கொள்கை வகுப்புகள் உள்ள வரை வகுப்பு வாதம் பேசித்தான் எல்லா வகுப்புக்கும் நீதி வழங்க முடியும்.

எனவே பார்ப்பனரல்லாத வாலிபர்களே! உங்கள் வீரத்தையும், ஊக்கத்தையும் இந்த தோல்வி என்னும் உலையில் வைத்துக்காய்ச்சி தட்டி தீட்டிக் கூர்மையாக்குங்கள். வகுப்பு வாதத்தால் தான் சமதர்மம் அடையமுடியும் என்று நினையுங்கள். இத் தோல்வியால் ஒன்றும் முழுகிப்போவதில்லை. அதை வரவேற்றுக் கொண்டு பார்ப்பனர்கள் நம்மைத்தட்டி எழுப்பி விட்டதற்காக அவர்களுக்கு நன்றி கூறுங்கள். எல்லாம் நன்மைக்கே என்றெண்ணுங்கள் எல்லாவற்றையும் நன்மைக்கு பயன் படுத்திக்கொள்ளுங்கள்ஜெயம்! ஜெயம்!! ஜெயம்!!!

## ஈரோடு முனிசிபல் சேர்மன் தேர்தல்.

கான் சாஹிப் கே. எ. சேக்தாவுது அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 15-11-34ந் தேதி மாலை 5-15 மணிக்கு முனிசிபல் ஹாலில் டிப்டிக் கலெக்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புதிய அங்கத்தினர்கள் யாவரும் விஜயம் செய்திருந்தார்கள். எல்லோரும் ராஜவிஸ்வாசப்ரமாணம் செய்துகொண்டார்கள்.

பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் கான் சாஹிப் கே. எ. சேக்தாவது அவர்கள் சேர்மனாக இருக்க வேண்டு மென்று பிரரேபித்தார். அதை தோழர் எம். கே. மகமது சுல்தான் சாயபு அவர்கள் ஆமோதித்தார். தோழர் எம். சிக்கையாநாயக்கர் அவர்கள் ஆதரித்தார். பின் வேறு ஒருவர் பெயரும் பிரரேபிக்காததால் தோழர் சேக்தாவுது அவர்கள் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின் புதிய சேர்மன் அவர்களுக்கும், புதிய கௌன்சிலர்களுக்குமமாலைகள் போடப்பட்டது. சேர்மன் அவர்களை அங்கத்தினர்களும், கமிஷனர் அவர்களும் பாராட்டிபேசிய பின்கான் சாஹிப்அவர்கள் தக்க பதிலளித்து நன்றி செலுத்தினர்.

## காரைக்குடி முனிசிபல் சேர்மன் தேர்தல்.

12-11-34ந் தேதி மாலை முனிசிபல் ஆபீசில் சேர்மன் தேர்தல் நடைபெற்றது. அதில் தோழர் மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் போட்டியின்றி சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின் மாலை நடந்தவைஸ் சேர்மன் தேர்தலில் டாக்டர் எஸ். சுப்ரமணியம் அவர்கள்போட்டியின்றி வைஸ் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## சத்திய மூர்த்தியின் தற்கால ஞானோதயம்.

தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் தேர்தலில் வெற்றியடைந்த ஆனந்த லாகிரியில் மெய் மறந்து பேசிய பேச்சு.

"எனக்குள் சில சமயங்களில் பிராமணர்—பிராமணரல்லாதார் என்கின்ற உணர்ச்சி வந்தது. ஆனால் இப்போது அது மறந்து போயிற்று."

"பிராமணரல்லாதார் எனக்குச் செய்த இந்த நன்றியை நான் எப்போதும் மறக்கமாட்டேன்."

"என் சரீரத் தோலை உரித்து பிராமணரல்லாதாருக்கு செருப்பாய் தைத்துப் போட்டாலும் கூட அது சரியான நன்றியாகாது" என்று பேசியிருக்கிறார். லாகிரி தீர்ந்தால் என்ன பேசுவார் என்று எழுத வேண்டுமா? O.

## தோழர். ஜே. என். இராமநாதன்.

பார்ப்பனரல்லாத மக்களின் நலத்திற்காக உழைத்து வந்த தோழர் ஜே. என். இராமநாதன் அவர்கள் 15-11-34ல் சென்னையில் மரணமடைந்தாரென்பதை யறிந்து வருந்துகிறோம். நமது அனுதாபத்தை அவர் குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## வருந்துகிறோம்.

தமிழ்ச் செல்வன் ஆசிரியர் தோழர் வி. எ. சந்திர ராசன் அவர்களின் வாழ்கைத்துணைவியார் தோழர் கமலாவதி அம்மையார் 1-11-34ந் தேதி காலஞ்சென்றாரென்பதையறிந்து வருந்துகிறோம்.

## விளம்பரம்.

இதனால் சகல மானவர்களுக்கும் பள்ளிபாளையம் மாரநாயுடு மகன் நாட்டராய நாயுடு தெரியப்படுத்துவது என்னவென்றால், திருச்செங்கோடு தாலூகா பள்ளிபாளையத்திலிருக்கும் என்தம்பி அர்த்தநாரி நாயுடு மக்கள் மைனர் மாரநாயுடு 1. மைனர் ராமசாமி 2. இவர்களுக்கு சட்டப்படி நான் கார்டியனாயிருந்தும்கிபத்துக்கு ஒரு ரங்கசாமிநாயுடு மகன்அர்த்தநாரி நாயுடுவை கார்டியனாக் கண்டு ஷை மைனர்கள் பேருக்கு நான் 12—12—33ல் எழுதிக்கொடுத்திருக்கும் விடுதலை பத்திரம் வாஸ்தவமாக ஏற்பட்டதல்லவென்றும், அதில் கண்டிருக்கும் சங்கதிகள் பொய்யானதென்றும் ஷை விடுதலை பத்திரத்தை ரத்து செய்ய வேண்டுமாய் செங்கிரி டி. மு. கோர்ட்டில் என்னால் தாவாவும் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. அப்படிக்கிருக்க ஷை விடுதலை பத்திரத்தை யனுசரித்து ஷை அர்த்தனாரி நாயுடு என்பவர் வரவேண்டிய பாக்கிகளையும், குத்தகை பாக்கிகளையும் வசூல் செய்வதற்குப் பிரயத்தனப்படுவதாகவும் ஷை விடுதலையில் கண்ட அடியில் கண்ட சொத்துகள் பேரில் குதவை கிரயம் முதலிய பராதீனம் செய்ய பிரயத்தனப்படுவதாகவும் தெரியப்படுகிறது. ஷை அர்த்தநாரி நாயுடுவிடம் குத்தகைபாக்கிகளையாவது, இதரபாக்கிகளையாவது யாரும் கொடுக்கக்கூடாது. மீறி கொடுக்கும் பக்ஷத்தில் அவைகள் என்னைக் கட்டுப்படுத்தாது. அதனால் ஏற்படும் நஷ்டத்துக்கு அவர்களே கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள். ஷை அர்த்தநாரி நாயுடுவிடம் ஷை சொத்துகள் பேரில் யாரும் எவ்வித குதவை கிரயம் முதலியது செய்து கொள்ளக்கூடாது என்றும் அப்படிசெய்து கொள்ளும் பக்ஷத்தில் அவைகள் என்னையாவது என் சொத்துகளையாவது கட்டுப்படுத்தாது என்றும் அதனால் ஏற்படும் நஷ்டத்துக்கும் அப்படிச்செய்து கொண்டவர்களே சரி சொல்லக்கடமைப்பட்டவர்கள் என்றும் இதனால் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

### சொத்து விபரம்.

1. சேலம் ரி. டி. செங்ககிரிசப்டி அமானிபள்ளிபாளையம் கிராமத்தில் க. ச. 705|1 புது நெ. 319|1 பு. ஏ. 2-32க்கு தீ 2-10-0 இதில் பாத்தியப்பட்ட வடபுறம் 0-25க்கு தீ 0-4-6 க. ச. 706|1 புது நெ. 320|1 பு. ஏ. 4-57க்கு தீ 5-2-0 இதில்பாத்தியப்பட்டது 3-75க்கு தீ 4-3-6 க. ச. 708 புது நெ. 322 பு. ஏ. 0-37க்கு தீ 0-7-0 இதுவும் 709 நெ. புது நெ. 323க்கு பு. ஏ. 0-45க்கு தீ 0-14-0 இதில் பாதிக்கு 0-22½க்கு தீ 0-7-0 ஆக ஏ. 4-59½க்கு தீ 5-6-0 இதிலிருக்கும் கிணர், வில்லை வீடுகள் கொட்டாய் முதலியதும்.

2. ஷை ரிடி. ஷை சப்டி அமானிபள்ளிபாளையம் புதுப்பேட்டையில் ராஜ வீதிக்கும் கிழக்கு ஆ. கு. அ. பழனிச்சாமி செட்டியார் வீட்டுக்கும் பொதுச் சுவற்றுக்கும் மு. ற. பழனிச்சாமி செட்டி வீட்டுக்கும் பொது சுவற்றுக்கும் தெற்கு பொது சந்து தடத்துக்கும் மு. ற. பழனிச்சாமி செட்டி வீட்டுக்கும் பொதுசுவற்றுக்கும் மேற்கு திருச்செங்கோடு ரோட்டிற்கும் வடக்கு இதன் மத்தியில் மேற்கு பார்த்த வில்லை வீடு அங்கணம் 6½பின்புறம் உள்ள வில்லை கொட்டாய் 6½யும் வடபுறம் சுவற்றோமாயுள்ள சேந்து கிணற்றில் பாதி பாத்தியமும் இதுகள் சகிதம்.

3. கோயமுத்தூர் ரிடி. ஈரோடு சப் டி வயிருபாளையம் கிராமம் க. இ. ச. 87 நெ. B. நஞ்சை 0-55க்கு த 9-8-0 க. ச. 93 நெ. A. நஞ்சை ஏ. 0-25க்கு த. 4-5-0 க. ச. 114 நெ. A. ந. ஏ. 0-39க்கு தாம் 3 12-0 ஆக காலை 3க்கு 1-19க்கு தாம் 20-9-0

வரவேண்டிய போக்கியப் பத்திரத்தின் சொத்து.

4. கோயமுத்தூர் ரிடி. ஈரோடு சப்ரிடி வைராபாளையம் கிராமம் க. ச. நெ. 125 A. ந. ஏ. 1-62க்கு த 33-7-0.

5. ஷை கிராமம் க. இ. ச. 112நெ. ஏ. 3-49க்கு த. 48-7-0 இதில் வடபுறம் பாதிக்கு 1-74½க்கு தாம் 24-3-6.

மா. நாட்டராய நாயுடு

17—11—34.

# ஜஸ்டிஸ் கட்சிக்கு ஈ. வெ. ராமசாமி 6 மாதத்திற்குமுன் செய்த எச்சரிக்கை.

## பொப்பிலிராஜா வீட்டில் கூடிய ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்கள் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் செய்த எச்சரிக்கைப் பிரசங்கம்.

(10—6—34 தேதி புரட்சி 29 மலர் 9-வது பக்கம் உள்ளது)

பல பிரமுகர்கள் பேசிய பிறகு பொப்பிலி அரசர் தோழர் ஈ. வெ. ராமசாமியின் அபிப்பிராயம் தெரிய வேண்டுமென்று விரும்பியதற்கு இணங்க அவர்பேசியதாவது.

ஈ. வெ. ராமசாமி.

தலைவரவர்களே! தோழர்களே!!

தலைவரவர்கள் தெரிவித்த விஷயங்கள் இயக்கநலனைக்கருதி அவசியம் கவனிக்கத்தக்கதாகும். எல்லாவிஷயத்தையும்விட நமது கொள்கை என்ன? திட்டம் என்ன? என்பதைப்பொது ஜனங்கள் அறியும்படி செய்ய வேண்டும். ஜஸ்டிஸ் கட்சி என்றால் மாதம் 4000 ரூ. சம்பளத்துக்கும் மந்திரி பதவிக்கும் ஊர் சிரிக்கச் சண்டைபோட்டுக்கொண்டிருக்கும் கூட்டம் என்று இனியும் பாமர ஜனங்கள் சொல்லும்படி நாம் விட்டுக்கொண்டிருக்கக்கூடாது. காங்கிரசுக்காரர்கள் என்பவர்களின் உள் எண்ணமும், நாணயமும் எப்படியிருந்தாலும் அவர்கள் ஏதோ இரண்டொரு கொள்கைகளைச் சொல்லி, அதைப் பெரிதாக்கிக் காட்டி அதற்காக அடியும், உதையும், நஷ்டமும் கஷ்டமும் சிறைவாசமும் பெற்றவர்கள் என்கின்ற பெயரைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களோடு இப்பொழுது திடீரென்று போட்டி போடுவதென்றால் அதுவும் ஒரு விளக்கமான—யாவருக்கும் தெரியும்படியான ஒரு கொள்கையும், திட்டமும் இல்லாமல் போட்டி போடுவதென்றால் சுலபமான காரியமல்ல என்பதே எனது அபிப்பிராயம். கட்சிக்கு கொள்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் பணமும், "அதிகாரமும் செல்வாக்கும் இருந்தால் எப்படியும் தேர்தலில் வெற்றி பெற்று விடலாம்" என்கின்ற தைரியம் சிலருக்கு உண்டு என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அந்த தைரியம் தனிப்பட்டவர்களின் நன்மைக்குப்பயன் படுமே தவிர ஒரு இயக்கத்துக்கு— பொது ஜன நன்மைக்கு பயன்படாது. சமீபகாலமாக ஜஸ்டிஸ் கட்சியின்பேரால் அதிகாரத்திலும், பதவியிலும் இருக்கிறவர்கள் கட்சி கொள்கை விஷயத்தில் போதிய லக்ஷியம் எடுத்துக்கொள்ளவில்லையென்றும், தங்கள் சுயநலத்தைவிட மற்றொன்றையும் சிறிதும் கவனிக்கவில்லை என்றும், கட்சி கொள்கைக்கு விரோதமாகக்கூட பல காரியங்கள் செய்யப்பட்டுவிட்டனர் என்றும் கட்சி ஜனங்களுக்குள்ளாகவே சொல்லிக்கொள்ளப்படுகிறதுடன் மற்றும் பலவிதமான புகார்களும் சொல்லிக் கொள்ளப்படுகின்றன. ஆனால் இப்படிச் சொல்லிக் கொள்ளப்படுவதற்கும் புகார்களுக்கும் ஆதாரமில்லை என்று கூறலாம். ஆதாரமில்லை என்பதைபொதுஜனங்களுக்கு மெய்ப்பிக்க வேண்டாமா? மற்றும் நமது எதிரிகள் இப்படிப்பட்ட விஷயங்களை தங்களுக்கு அனுகூலமாய் உபயோகித்துக் கொள்ளாமல் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? நமது சொந்த செல்வத்தையும், செல்வாக்கையுமே எல்லாவற்றிற்குமே சமாதானமாக ஆக்கிக்கொள்ளலாம் என்று சிலர் நினைத்தால் கட்சியில் உள்ள செல்வமும், செல்வாக்கும் இல்லாத மக்களின் கதி என்ன ஆகும் என்பதை யோசித்துப்பாருங்கள். இவர்களுக்கு ஒரு கொள்கையோ, இவர்கள் மீது கூறப்படும் புகார்களுக்கும், குற்றங்களுக்கும் பதில் கூறுவதற்குத்தகுந்த உண்மையான ஆதாரங்களோ இல்லாவிட்டால் இவர்களுக்கெல்லாம் கட்சியில் இடமோ கட்சியின் பேரால் வெற்றியோ, எப்படி கிடைக்கும்.

ஜஸ்டிஸ் கட்சி என்றால் ஜமீன்தார்கள், முதலாளிமார்கள் கட்சியே தவிர பொதுமக்கள் கட்சியல்ல என்றுசொல்லப்படுவது இப்போது மிகமிக சகஜமாகிவிட்டது. இதை நாம் பொய்யாக்கி காட்டாவிட்டால் கட்சியில் உள்ள உண்மை உழைப்பாளிகளுக்கு இதை விட வேறு அவமானம் வேண்டியதில்லை.

ஆதலால் தகுந்த வேலைத்திட்ட முறைகளை ஏற்படுத்தி பாமர ஜனங்களுக்கு நன்றாய் பிரசாரம் செய்து நமது எதிரிகளின் விஷமப் பிரசாரத்தை தகர்ப்பதுடன் ஏழைப்பொது மக்களுக்கு பயன்படத் தக்க முறையில் உழைத்தாக வேண்டும். வெறும் ஸ்தாபனங்கள் பெரிதும் சுயநலக்காரர்களின் விளம்பரத்துக்கு ஒரு சாதனமாகும். உழைப்பும், வேலை செய்து காட்டுவதுமே தான் நமது எதிரிகளைத் தோற்கடித்து நமக்கு நல்ல வெற்றியைக்கொடுக்கும்.

### இந்திய சட்டசபைத் தேர்தல்.

அடுத்த படியாக இந்திய சட்டசபைத் தேர்தலைப்பற்றி பேசப்பட்டது. இந்தச்சமயத்தில் இது ஒரு முக்கியமான விஷயம் என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். நமது கட்சிக்கு ஒரு கெட்ட பெயருண்டு. அதைப் பொய் என்று மறுக்கவும் என்னிடம் போதிய ஆதாரமில்லை. என்னவென்றால் "ஜஸ்டிஸ் கட்சிக்காரருடைய நாட்டமெல்லாம் மாகாண சட்ட சபையிலேயே ஒழிய, இந்திய சட்ட சபையைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை" என்று சொல்லப்படுவதாகும். இதற்கு என்னவிதமான உள் எண்ணம் கற்பிக்கப்படுகிறதென்றால் "மாகாண கவுன்சிலில் இருந்தால் மந்திரிவேலை பெறலாம் அல்லது மந்திரிகளுக்கு துணை புரிந்து நமது வாழ்க்கை நலத்துக்கு ஏதாவதுபயன் அடையலாம்" என்று கருதி இப்படி அலக்ஷியமாய் இருப்பதாக உள் எண்ணம் கற்பிக்கப்படுகிறது. இந்தப் படி சொல்லுபவர்களுக்கு அநுகூலமாகவே சம்பவங்களும் இருந்து வருகின்றன.

இதன் பயனாகவே தென்னிந்தியாவைப்பற்றியும், தென்னிந்திய மக்களைப்பற்றியும் வட இந்தியர்கள் கேவலமாய் மதிக்கும்படியும், தென்னிந்தியப் பார்ப்பனர்கள் தான் தென்னிந்திய பொது நல ஊழியர்கள் என்றும், அவர்களே தேசபக்தர்கள் என்றும் கருதும் படி செய்யப்பட்டதுடன் பார்ப்பனரல்லாதார் என்றால் தேசத்துரோகிகள் என்றும், அன்னிய ஆட்சிக்கும் அதன் கொடுங்கோல் தன்மை என்பதற்கும் துணை புரிந்து சுயநலம் தேடுகிறவர்கள் என்றும் கருதும்படியாக நமது நாட்டுப் பார்ப்பனர்கள் பலரால் விஷமப் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது. பல காரணங்களால் சிலர் உழைத்து வந்ததின் பயனாக நம்மவர்களில் சிலர்-சிறப்பாகவும், குறிப்பாகவும் தோழர்கள் ஆர். கே. ஷண்முகம், ஏ. இராமசாமிஆகியவர்கள் இந்திய சட்டசபைக்கு போக நேர்ந்ததில் அவர்களுக்கும், மற்றும் தென்னிந்திய பார்ப்பனரல்லாத சமூகத்துக்கும் எவ்வளவு அந்தஸ்தும், பெருமையும் ஏற்பட்டது என்று யோசித்துப் பாருங்கள். தோற்றுப்போனவர்கள் கூப்பாடு போடுவதைப்பற்றியும், அப்படிப் பட்டவர்கள் அழுவதைப் பற்றியும் நாம் லக்ஷியம் செய்ய வேண்டியதில்லை. அதுபோலவே இன்னமும் சிலர் இந்திய சட்டபைக்கு நம்மவர்கள் போக நேர்ந்தால் தேசத்துரோகிகள் யார்? தேசிய வியாபாரத்தில் வயிறு வளர்ப்பவர்கள் யார் என்பதை உலகம் அறியச்செய்து விடலாம். தோழர் ஷண்முகத்தைப் போலவே எல்லாத்தொகுதிக்கும் ஆள் கிடைக்குமா என்று கேட்பீர்கள். அதைப்பற்றி எனக்கு லக்ஷியமில்லை. நமது நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் பிறவி எதிரிகளாய் இருப்பவர்களை நமது பிரதிநிதிகளாய் தெரிந்தெடுத்து வருகிறோம் என்கின்ற இழிவும், முட்டாள் தனமுமாவது நமக்கு இல்லாமல் போகுமல்லவா? அதோடு மாத்திரமல்லாமல் நமது எதிரிகள் இந்திய சட்டசபைக்குப் போய் நமக்குக்கெடுதி செய்யும் காரியமாவது நிறுத்தப்பட்டதாக ஆகுமா? இல்லையா? தீண்டாமை விலக்குக்கு விரோதமாக இன்று இந்திய சட்டசபையில் இருப்பவர்கள் யார் என்று யோசித்துப்பாருங்கள். பார்ப்பனரல்லாத கட்சிக்கு நாங்கள் தான் தூண்கள் என்று பெருமை பேசி பயன் பெற்று வரும் தஞ்சை-திருச்சி ஜில்லா தொகுதியில் வெற்றி பெற்றுச்சென்ற பச்சை வர்ணாச்சிரம வாதியா? அல்லவா? என்று கேட்கின்றேன். இப்படிப்பட்ட நிலையில் இனியும் நமக்கு அப்படிப்பட்ட இழிவும், சங்கடமும் வந்து சேராமல் இருப்பதற்கு நாம் அந்த தேர்தலில் தகுந்த கவனம் செலுத்த வேண்டும். அத்தொகுதிக்கு கட்சியின் பேரால் பணம் வசூலித்துக் கொடுத்தாவது தக்க அபேக்ஷகர்களை நாம் தெரிந்தெடுக்கச் செய்யவேண்டும். இவ்விஷயத்தில் முன்போல் இனி அலக்ஷியமாய் இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகின்றேன்.

---

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

### இரண்டாவது ஆண்டு விழா.

"நவசக்தி" ஆசிரியர் திரு. வி கல்யாண சுந்தரம் (முதலியார்) அவர்கள் தலைமையில் சென்னை ஜார்ஜ் டவுன் மலையப்பன் வீதியில் உள்ள கார்பொரேஷன் பள்ளிக்கூடத்தில் 25-11-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

அதுசமயம் தோழர்கள் எஸ். எஸ் அருணகிரிநாதர், ஏ. சுந்தரி அருணகிரி, டாக்டர். மே. மாசிலாமணி (முதலியார்), ஏ. புவனாம்பாள் அழகப்பா, முதலியோர் பேசுவார்கள்.

டி. சம்பந்தம்,
எஸ். ரங்கநாதன்,
காரியதரிசிகள்,

---

## தென் இந்திய ஆதி திராவிட வைதீக மகாஜன சமாஜம்.

இந்த சமாஜத்தின் 13-வது வருஷ பூர்த்தி விழா 8-12-34ந் தேதி பகலில் திருநெல்வேலி ஜில்லா கொக்கிரகுளம் செல்வ விநாயகர் தெருவிலமைக்கப்பட்டிருக்கும் சமாஜ தலைமை ஆபீசில் நடைபெறும்

அது சமயம் பல விஷயங்களைப்பற்றி யோசிக்கப்படும் என பொது காரியதரிசி எழுதுகிறார்.

(4ம் பக்கத்தொடர்ச்சி)

மாக தனித்தனியாக இல்லாமல் உடல் முழுமைக்கும் ஒரே உடையாக கஷ்டமில்லாமல் விரைவில் போடவும் கழற்றவும் கூடியதாயிருக்கும். தேகம் சீதளத்தால் பாதிக்கப் படாமலிருப்பதற்காக குளிர் காலத்தில் உடைகளுக்குள் தேகத்திற்கு வேண்டிய அளவுக்கு மின்சார சக்தியின் உதவியால் உஷ்ணம் புகுத்தப்படும். அதாவது வருங்கால மனிதனை பனியும் குளிரும் சிறிதும் பாதிக்காது. சூரிய கிரணங்களிலிருந்து வரும் உஷ்ணத்தை எடுத்து ஒரு வித யந்திர விளக்குகளில் நிறப்பி வைக்கப்படும். அவ்விதம் சேமித்து வைக்கப்பட்ட உஷ்ணத்தின் உதவியால் பனிக்காலத்தின் தொல்லையை நீக்கிக் கொள்ளுவான்.

50வருடங்களுக்குப்பின் மனிதன், மின்சார சக்தியால் சூடாக்கப்பட்டு மின்சாரசக்தியின் உதவியால் ஓடும் வேகம் நிறைந்த வண்டியில் தன்னுடைய ஆபீஸுக்குச் செல்லுவான். வண்டியில் போகும் வண்ணமாகவே ஆபீசிலிருக்கும் குமஸ்தாவிடம் ரேடியோமூலம் வார்த்தையாடுவான். ஆபீஸில் நடக்கும் விஷயங்கள் யாவற்றையும் தெரிந்து கொள்ளுவான்.

## பெண்கள்.

1984-ல் அல்லது 1994ல் உலக நிலைஆண்களுக்குஎவ்விதமாற்றத்தை உண்டாக்கிவிடும் என்று சொன்னேன். இப்போது பெண்கள் எந்த நிலைமையிலிருப்பார்களெனப் பார்ப்போம்.

தங்களிஷ்டப்படி பெண்குழந்தை வேண்டுமென்றால் பெண்குழந்தையும், ஆண்குழந்தை வேண்டுமென்றால்ஆண்குழந்தையும் பெற்றெடுத்துக்கொள்வார்கள்,

50 வருடங்களுக்குப் பின் பெண்களுக்கு (முக்கியமாக மனைவிமாராயிருப்பவர்களுக்குக்கூட) அடுப்பூதும் வேலை இருக்கவே இருக்காது. அடுப்பு என்றால் என்ன? என்பது கூட வருங்காலத்துப் பெண்களுக்குத்தெரியாமல் போய்விடும். ஏனென்றால் சமயல்வேலையை போஜனக் கடைகள் ஏற்றுக்கொண்டு வேளாவேளைக்கு கேட்டவர்களுக்கு சாப்பாடு அனுப்பிவைக்கும். சமயல் வேலை ஒழிந்து விடுகிறபடியால் வீடுகள் தட்டுமுட்டுச்சாமான்களால் நிறப்பப்படாமல் இடம் தாராளமாயிருக்கும். இயந்திரமனிதன் வீட்டு வேலைகளைச் செய்துவிடுவான். வீடுகள் தும்பும், தூசும், ஒட்டடையும் படியமுடியாத மாதிரியில் மூலைகள் ஏற்படாதிருக்க வட்டம் வட்டமாக கட்டப்படும்.

இவ்வித ஏற்பாடுகளால் வருங்காலப்பெண்களுக்கு சிரமம் நீங்கிவிடுவதோடு காலமும் மிச்சப்படும். அதனால் பெண்கள் படிப்பாளிகளாகவும், அறிவாளிகளாகவும், பெரியஅரசியல் வாதிகளாகவும், வியாபார நிபுணர்களாகவும், திகழ்வரர்கள். மனித முன்னேற்றமே ஓர் உருவாக வந்தாற்போல் விளங்குவார்கள்.

மனிதன் உலகத்தின் ஒரு பாகத்திலிருந்தபடியே மற்றபாகங்களில்நடக்கும் விஷயங்களை ரேடியோ மூலம் அறிந்து கொள்ளச்சௌகரிய மேற்படும். பலபாகங்களிலிருந்தும் ரேடியோ மூலம்வரும் செய்திகள் பல பாஷைகளைக் கொண்டதாயிருப்பதால் ஒருவர் பாஷையை ஒருவர் கற்றுக்கொள்ளவும் அதன்பயனாகப்பரஸ்பர உணர்ச்சியும், சிநேகமும் சகோதரத்துவமும் உண்டாகச்சந்தர்ப்பமளிக்கும்.

---

(6ம் பக்கத்தொடர்ச்சி)

விட்டு வரட்டும். எவன் முன்னதாக வந்து நம்முன்நிற்கிறானோ அவன்தான் பெரியவன் என்றுசொல்லி தான் ஒரு ஆதிஅந்தமற்ற ஜோதிவடிவமெடுத்துக்கொண்டு ஒண், டூ, திரீ (1,2,3) போட்டு பந்தயத்தை ஆரம்பித்து வைத்து விடவே மஹாவிஷ்ணுபன்றி ரூபமெடுத்துப் பூமியைத் துளைத்துக் கொண்டு பரவசிவனுடைய பாதத்தைக்கண்டு பிடிக்கவும் பிரமா அன்னப்பட்சி ரூபமெடுத்துக்கொண்டு முடியைக் கண்டுபிடிக்கவும் புறப்பட்டார்கள். பாவம்பன்றியாகிய விஷ்ணு பல லக்ஷக்கணக்கான வருஷகாலம் பூமியைத் துளைத்துக்கொண்டு போயும் அந்தச் சிவபரமாத்மாவினுடைய பாதத்தை எட்டிக்கூடப் பார்க்கமுடியாமல் போகவே இனி முடியாது என்று திரும்பி வந்து அந்தப்பன்றியாகிய விஷ்ணு வானவர் சிவன் முன் நின்று வணங்கி என்னால் பார்க்க முடியவில்லையென்று உண்மையைச் சொல்லி விட்டாராம்.

இந்தச் சங்கதி இப்படியிருக்க முடியைத்தேடி அன்னப்க்ஷிவடிவாகப் போன பிரம்மாவோ மேலே நோக்கி எத்தனையோ லக்ஷவருடகாலம் பறந்து போயும் முடியைக் கண்டுபிடிக்க முடியாமல் போகவே இனியென்ன செய்யலாம் என்று மனம் சலித்துப்போயிருக்கிற சமயத்தில் அந்த ஜோதியின் முடியிலிருந்து தவறிக் கீழ் நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு தாழம்பூவை பிரமா சந்தித்து இன்னும் ஜோதியின் முடியானது எவ்வளவு தூரம் இருக்குமென்று கேட்கவே அந்தப் பூவானது தான் அந்தமுடியிலிருந்து தவறிப் பல லக்ஷ வருஷ காலமாகக் கீழ் நோக்கி வந்துகொண்டிருப்பதாகச் சொல்லவே பிரமா பயந்து தன்னுடைய சமாச்சாரத்தை அந்தத் தாழம்பூவினிடம் சொல்லித் தனக்கொரு பொய்ச்சாட்சி அதாவது "இந்த அன்னப்பட்சியானது ஜோதியின் முடியைத் தொட்டுவந்ததாகச் சொல்லவேண்டு"மென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பிரகாரம் தாழம்பூ இணங்கிவிடவே அந்தப்பூவுடன் பிரமாவாகிய அன்னமும் கீழே இறங்கி வந்து அந்த ஜோதியை வணங்கித் தான் முடியைத் தொட்டு வந்ததாகவும், அதற்குத் தாழம்பூ சாட்சியென்றும் சொன்னதாம். அந்தப்படி தாழம்பூவும் சாட்சி சொல்லிற்றும்.

அதைக் கேட்டு ஜோதி வடிவாகிய பரமசிவம் தனது ஞானதிருஷ்டியினால் ஆராய்ந்து பார்த்து பிரமா சொல்லுவதும் பொய், தாழம்பூ சாட்சி சொன்னதும் பொய்யென்று அறிந்து மகாவிஷ்ணுவைப் பார்த்து நீ உண்மையைச் சொன்னதால் கோயில் கட்டி உன்னுடைய விக்கிரகத்தை வைத்து எல்லாராலும் பூஜிக்கக்கடவது என்றும், பிரமாவை நோக்கி நீ பொய் சொல்லிவிட்டதால் உனக்கு ஆலயமோ பூஜையோ தேர்திருவிழாவோ ஒன்றும் நடைபெறாமல் போகக்கடவது என்றும், பொய்ச்சாட்சி சொன்ன தாழம்பூவைக் கோபத்தோடு பார்த்து நீ நம்மால் அணியத்தக்க பெருமை பெற்றிருந்தும் பொய்ச்சாட்சி சொல்லிவிட்டபடியால் இனிமேல் நீ தேவாலயங்களுக்கு அருகதையில்லாமலும் ஊரார் மணக்கியுமாகப் போகக் கடவதென்றும் சாபங்கொடுத்துவிட்டு அந்த ஜோதி வடிவம் அப்படியே அண்ணமலை வடிவமாக அமர்ந்துவிட்டதாகவும், அந்த ஜோதி வடிவத்தின் ஞாபகார்த்தமே கார்த்திகைத் தீபமென்னும் திருவண்ணமலை தீபமென்றும் ஒரு பிரமாண்டப் புழுகு கதை அருணசல புராண வாயிலாகக் கட்டி விடப்பட்டுமிருக்கிறது. அந்தப்படி வைணவர்களும், சைவர்களுமாகிய பல கோடி மக்கள் வருஷா வருஷம் கொண்டாடியும் வருகிறார்கள்.

ஆனால் ஷை கொண்டாட்டத்திற்குக் காரணமாகச்சொல்லப்படும் இருசாராரின் கதைக்கூற்றுகளை அறிவுள்ள மக்கள் ஆராய்ந்து அலசிப்பார்த்தால் அத்தனையும் பதராகத்தானே முடியும். மஹாவிஷ்ணு பூமியையும், வானத்தையும் ஈரடியால் அளந்து போதாத மூன்றுவதடிக்கு நிரபராதியாகிய மகா பலியின் சிரசைப் பலியாக்கிக் கொண்டது (பொய்க் கதையானாலும் அது) எவ்வளவு அக்கிரமமும், அநீதியும், தெய்வத் தன்மைக்குச்சற்றும் பொருந்தாததுமாகுமென்பதும்,

பிரமாவும், விஷ்ணுவும்பெருமைக்காகச்சண்டையிட்டுக் கொண்டதும், அவர்களுடைய மமதையை ஒடுக்குவதற்காகச் சிவன் ஆதியந்தமற்ற ஜோதி வடிவமாக நின்றதும் பிரம விஷ்ணுக்கள் அடிமுடியைத் தேடிப் போனதும், முடியாமல் திரும்பி வந்ததும் தாழம்பூ சாக்ஷி சொன்னதும் எவ்வளவு உண்மையாயிருக்குமென்பதும் இன்றைய விஞ்ஞானவுலக மக்கள் விளங்கிக் கொள்ள முடியாமல் மத நம்பிக்கை காரணமாக இத்தகைய மூடப்பழக்க வழக்கங்களில் சிக்குண்டு தங்கள் அறிவு, ஆராய்ச்சி, காலம், பொருள் முதலியவற்றை வீண்விரயம் செய்து கொண்டு காட்டுமிராண்டிப்பருவத்திலேயே வாழ்ந்து கொண்டு வருவார்களானால் இவர்கள் என்று தான் சுயமதிப்பும், சுயமரியாதையும், சுயவுரிமையும் பெறுவதென்பது நமக்கு விளங்க வில்லை. ஆதலால் அறிவுள்ள மக்கள் காட்டுமிராண்டிக்கால மக்களால் அனுஷ்டிக்கப்பெற்ற கோயில் தீர்த்தம், தேர், திருவிழா, கார்த்திகை தீபம் என்பன போன்ற அறிவற்ற விஷயங்களை அறவேயகற்றி தற்கால விஞ்ஞானவுலகத்தில் என்ன நடைபெறுகின்றதென்பதைக் கண்விழித்துப்பார்த்து தங்களுரிமைகளைப் பாழாக்கிவிடாமல் பாதுகாத்துக்கொள்வார்களாக.

---

# முனிசிபல் சேர்மன் தேர்தல்.

## மாயவரம்.

இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 12 11-34ந் தேதி நடைபெற்றது. மாஜி சேர்மன் தோழர் நாகலிங்கம் பிள்ளை அதிக ஓட்டுகளால் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## வாணியம்பாடி.

14-11-34ந் தேதி இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் நடந்தது. அதில் ஜனாப் என். மௌலானா ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

---

## நாகம்மாள் ஞாபகார்த்த புட்பால் கிளப்.

### சேலத்தில் டூர்னமெண்ட்.

சேலம் ஒய். எம். சி. ஏ. புட்பால் டூர்னமெண்டில் ஜோலார்பேட்டை நாகம்மாள்ஞாபகார்த்த புட்பால் கிளப் A. B. இரண்டு டீம்களும் 27-11-34ம்தேதி விளையாடுவார்கள்.

---

## மணகள் தேவை.

மாதம் ஒன்றுக்கு 200ரூபாய் சம்பளமுள்ள சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கும் 28 வயதுள்ள ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த கனவான் ஒருவருக்கு ஒரு அழகுள்ள பெண் தேவை.

பெண் வாலிப விதவையாய் இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விலாசம்:—

K. V. V.

c/o/ Pahutharivu, Erode.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

புரட்சிக்குப் பின்னும் 19வது நூற்றூண்டின் ஆரம்பத்தில் மறுமுறையாக அது ஸ்தாபகஞ் செய்யப்பட்ட காலத்திலும் கிறிஸ்து மதத்தைத் தழுவும்படி ஜனங்கள் மதக்காரர்களாலும், சர்க்காராலும் பலாத்காரஞ் செய்யப்பட்டார்கள்.

ஆயினும் அக்காலங்களில் மத விரோதிகளும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் பழுத்த நாஸ்திகர்கள் இருந்த காலங்களும் அனேகம் உண்டு. அத்தகைய நிலைமையை நாம்எதிர்பார்க்கமுடியாமல் தடுக்கக் கூடிய விசேஷக் குறிகள் நமது காலத்தில் இருக்கின்றனவா என்று நாம் விசாரணை செய்யவேண்டும்.

ஆம்! நிச்சயமாகவே இருக்கின்றன. நாம் வசிக்கும்காலம் முற்றிலும் மாறுதலான புதியகாலம். நான் இப்பொழுது ஒரு குன்றின் சரிவிலிருந்து கொண்டு இதை எழுதுகிறேன். இக்குன்று லாஸ் எஞ்சல்ஸ் என்னும் நகரத்தை நேராக நோக்கிக்கொண்டிருக்கிறது. சூரியப்பிரகாசத்தினூடே அழகிய குடிசைகளும், சுகசௌகரியத்திற்குரிய போஜன விடுதிகளும் எங்குநோக்கினும் ஏராளமாய்க்காட்சியளிக்கின்றன. முன்னொருகாலத்தில் அவ்விடங்களிலெல்லாம் மெக்சிகோவாசிகளின் அசுத்தம் நிறைந்த சின்னஞ்சிறுகுடிசைகள் அடர்ந்து கிடந்தன. அக்காட்களில் அங்குவளர்ந்து கிடந்த புல்பூண்டுகளை ஏதேனும் சில ஆடுமாடுகள் அசட்டையாகக் கடித்து மென்றுகொண்டிருக்கும். ஆனல்இப்பொழுதோ கீழேயுள்ள நகரங்களிலிருந்து ரதங்கள் ஓடும் சப்தமும், விசைவண்டிகள் ஓடும் ஓசையும் இங்கு கேட்கின்றன. அந்த சப்தங்கள் மந்தமாக இங்கு ஒலித்துக் கொண்டிருக்கின்றன. நூறு வருஷங்களுக்கு முன்னே நாம் கனவிலும் கண்டிராத ஆயிரக்கணக்கான விஷயங்கள் நமது கண்முன்னல் நடப்பதைப் பார்க்கிறோம். இராக்காலத்தில் மேகப்பிராந்தியத்திலிருந்து மிகப்பெரியவெளிச்சம் பேரொளியை வாரி வாரி இறைத்துக்கொண்டிருக்கின்றது. அவ்வெளிச்சம் ராஜபோகவினோதவேடிக்கைகள் நடைபெறுகின்றனஎன்பதையும், அங்குகாணப்படும்சுகபோக சாதனங்கள்உலகத்தின்மூலை முடுக்குகளிலிருந்து கொண்டுவரப்பட்டவைகள் என்பதையும்; எடுத்துக்காட்டுகிறது.

அதை மிதமிஞ்சிய மாற்றம் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். லோகாயுதப் புரட்சி என்றும் கூறுகிறீர்கள். ஆம்! ஆனல் படக்காட்சி சாலைகளில் காணப்படும் இன்றைய மனித சுபாவம் நேற்று மெக்ஸிகோ ஜெபாலயத்தில் இருந்தது போலவே இருந்து வருவதை நாம் காணவில்லையா? மக்களின் இயல்பு ஆயிரம் ஆண்டுகட்கு முன் ஆஸ்டெக் கோவில்களில் இருந்தது போலவும், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் ரோமாபுரி வீதிகளிலும் ஏதென்ஸ் நகரத் தெருக்களிலும் இருந்தது போலவும், நாலாயிரம் வருஷங்களுக்கு முன் பாபிலோன், திபெஸ் முதலிய இடங்களில் இருந்தது போலவுமே இன்றைக்கும் இருப்பதாக நாம் பார்க்க வில்லையா? கிறிஸ்தவர்கள் இது சம்பந்தமாய் சிலவிஷயங்கள் கூறுகிறார்கள். அவைகளைக்கேட்க எனக்கு விநோதமாக இருக்கிறது. அவை யென்னவென்றால் ஏசுநாதர் அவதரித்து வேலை செய்த ஸ்தாபித்த வைதீக மதப் புரட்சி எங்கு போயிற்று? 15 நூற்றூண்டுகளாக ஆதிக்கஞ்செலுத்தி வரும் கிறிஸ்து மதத்தின் பலன் எங்கு போயிற்று என்பவையாம்.

ஆனல் இந்த சிந்தனை முழுவதும் நியாயமானதாக இல்லை. ஒரு நூறு வருஷங்களுக்கு முன்னே, அல்லது சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்னே இப்படி நினைத்தல் நியாயமானதாக இருக்கலாம். அக்காலத்தில் மனித சுபாவம், சராசரி மனிதன் நடத்தை, அறிவு முதலியவை இக்காலத்தியவைகளைவிட உயர்ந்தவையாயில்லை. நாகரீகம் ஒரு சிறிதும் இல்லாத காலத்தில் பெரிய நகரங்களில் இருந்த மக்களைப் போலவே அவர்கள் அக்காலத்தில் சிறிதும் முன்னேற்றம் இல்லாதிருந்தார்கள்.

ஆனல் இப்போதோ மக்களின் அறிவு விசாலமடைந்து நாம் வாழும் இன்றைய உலகம் ஒரு புதிய உலகமாகும். நாம் ஒரு புதிய ஜாதியாராவோம். வெகுகாலமாக முன்னேற்றமடையாமல் இருந்து வந்த ஜனங்கள் திடீரென்று வேகமாய் முன்னேறும்படியான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு ஒருவித நோய்க்குணம் தோன்றுவதும், ஏதும் புரியாதது போல் மயக்கம் தோன்றுவதும், சில சமயங்களில் அவர்கள் நியாயத்தையும், நிதானத்தையுமிழந்து போவதும் உண்டு. வாழ்க்கை இத்தகைய நிலைமைகளை திருத்தி அமைத்து விடும். அதனுடைய ஒழுங்கும், அதனுடைய சட்டங்களும், "தேவலோகத்தில்" தயார் செய்யப்பட்டவையல்ல. ஆனல் நமது நித்திய நடை முறைகளிலிருந்தே வகுக்கப்பட்டவை. அத்தகைய வாழ்க்கைச் சம்பவங்கள் துக்ககரமானவையாயுமிருந்திருக்கலாம், இலாபகரமானவையாயுமிருந்திருக்கலாம். மணப்பருவச் சேஷ்டைகள் மங்கைப் பருவத்தையும், மனிதப் பருவத்தையும் நமக்கு ஞாபகப் படுத்தும் குறிகளேயாகும். நாம் இரண்டு தலைமுறைகளில் வெகு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். உலகம் இதுவரையில் இதுபோன்ற முன்னேற்றத்தை அறிந்திராது. இதனைக் கண்டு உலகம் சற்றுமிரண்டுதான் ஆகவேண்டும். அதை நாம் தடுக்க முடியாது. உலகம் அங்ஙனம் மிரளுதலும் நல்லதுதான். தனவந்தர்கள் சோம்பிக் கிடப்பதையும் அடிமைகள் மௌனம் சாதிப்பதையும் விட உலகம் மிரளுதல் நல்லதுதான்.

நான் இருந்து எழுதும் குன்றின் சமீபத்திலே புதிய சகாப்தத்தின் தெளிவான சின்னங்களில் ஒன்று இருக்கிறது அதுதான் மவுண்ட் வில்சன் சோதிட மண்டபம். (அல்லது வானசாஸ்திர மண்டபம்.) ஆனல் மிகப்பெரிய தூரதிருஷ்டிக் கண்ணுடியும் அதன் அற்புத வேலையும் அறியாமை மிகுந்த லட்சாதி லட்சம் ஜனங்களுக்கு எதை விளக்கக் கூடும்? ஏதோ ஒரு பருவகாலத்தில் அவர்கள் மிகுந்த உற்சாகம் காட்டினர்கள். கலிபோர்னியாவில் உலகத்திலேயே மிகப்பெரிய தூரதிருஷ்டிக்கண்ணுடி இருந்தது. இப்போது.........புதிய சகாப்தமாகிய தற்காலத்தை நாம் புனருத்தாரண காலம் என்று உணர்ந்து வருகிறோம். நம்மைப்போலவே அக்காலத்தில் மக்களுடையநரம்புகள் பல மற்றிருந்தன. அக்காலத்து மக்கள் குடியர்களைப் போல மனே வெறியர்களாயிருந்தார்கள். அமெரிக்காவென்னும் புது உலகம் கண்டுபிடிக்கப்பட்டதும் மனிதர்கள் கொண்டிருந்த மனேபாவனைகள் எல்லாம் சிதைந்து போகலாயின. கலிலியோ பொம்மை உலகத்தை உடைத்தெறிந்து உண்மையான உலகத்தைக்காட்டினன். பொம்மைஉலகம் அக்காலத்து மக்களின்எண்ணங்களை யெல்லாம் அடக்கியொடுக்கி நசுக்கிக்கொண்டிருந்தது.

17-வது நூற்றூண்டில் கோபர்நிக்கஸ் வேலையையோ அல்லது கலிலியோவேலையையோ எத்தனைபேர் அறிந்திருந்தார்கள்? மிகமிகச்சொற்பமென்றே சொல்லவேண்டும். ஐரோப்பாவில் 100-க்கு 90-பேர் எழுதப்படிக்கத்தெரியாமலிருந்தார்கள். ஆயிரம் வருஷகாலம் மதமானதுமக்களிடையே சர்வாதிகாரம் பெற்றிருந்த பிறகும் 100-க்கு 10பேருக்குத்தான் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தது. அக்காலத்தை, கல்வி, நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்த காலமென்று பைரன் வர்ணித்திருக்கிறார். அக்காலத்தில், எழுதப் படிக்கத் தெரிந்த 100-க்கு 10-ஜனங்களுக்கும் கலிலியோவைப்பற்றியும் புதிய வானசாஸ்திரத்தைப்பற்றியும், அதிகம்தெரியாதிருந்தது. ஆனலும் கலிலியோ புதிதாய்க் கண்டுபிடித்திருந்த விஷயம் ஐரோப்பாவின் முக்கிய விடங்களிலெல்லாம் காட்டுத்தீ போல் பரவலாயிற்று. பழைய காலத்து மத நம்பிக்கை உலகத்தை ஏதோ ஒருவிதமாக எண்ணியிருந்தது. அவ்வெண்ணம் இப்போது பொய்யானதென்றுருஜுவாயிற்று. அக்காலத்தில் மனிதர்கள் ஆகாயத்தைக் கட்டிப்பொருள் என்று எண்ணியிருந்தார்கள். இப்போது அவ்வெண்ணம் உடைந்து சுக்கல் சுக்கலாகி விட்டது. அவர்களுடைய மனத்தில் ஆகாயம் பரந்த வெளியெனத் தோன்றிவிட்டது.

கலிலியோவும் அவருக்குப் பிந்தியவர்களும் விளக்கிக் காட்டிய உலகம் மிகச் சிறியதென்றேசொல்லவேண்டும். மவுண்ட்வில்சன் அப்சர் வேட்டரி என்னும் நட்சத்திரசாலை உதவியால் பார்க்கும் உலகத்தை விட அக்காலத்தில் பார்க்கப்பட்டது மிகச் சிறியதுதான். நான் அதன் பரப்பைப் பற்றி பேசவில்லை. அது கொள்கையை வித்தியாசப்படுத்தாது.

மிக முக்கியமானதும், முடிவுக்குவராமலிருப்பதுமான மற்றொரு விஷயம் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட நட்சத்திரங்களைப் பற்றியதாகும். உலகம் படைக்கப்பட்டகாலத்திலேயே எல்லா நட்சத்திரங்களும் கடவுளுடைய கைகளால் ஆகாயத்தில் தெளிக்கப்பட்டதானல், அதைப்பற்றிப் பரவாயில்லை. அவை இரண்டாயிரமாயினும் அல்லது பல கோடியாயினும் அதில் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனல்அந்

நட்சத்திரங்கள் யாவும் அப்படி ஒரே காலத்தில் தெளிக்கப்பட்டிருந்தால், அவைகள் அனைத்திற்கும் ஏறக்குறைய ஒரே வயதே இருக்கும். ஆனால் அவை ஒன்றுக்கொன்று கோடானுகோடி வருஷ வித்தியாசங்களைக்கொண்டிருக்கின்றன. தொட்டிலில் இருந்து கிளம்புகிற சிறிய நட்சத்திரங்களும் இருக்கின்றன. மகத்தான மேக மண்டலத்தில்கருவுயிர்த்துக் கிடக்கும் நட்சத்திரங்களும் இருக்கின்றன கோடானுகோடிவயதுடையநட்சத்திரங்கள் தங்களுடைய பிரகாசத்தை மெதுவாகவும் கொஞ்சங் கொஞ்சமாகவும் இழந்து கொண்டு வருகின்றன, இள நட்சத்திரங்களுக்கும் வயது முதிர்ந்த நட்சத்திரங்களுக்கும் இடையே ஏராளமான நட்சத்திரங்கள் இருக்கின்றன. அவை ஒன்றிற்கொன்று வயதில் வித்தியாசப்பட்டதாயும் பலவிதமானவையாயும் இருக்கின்றன. ஒரு நகரத்தின் தெருவில் மாலை வேளையில் நடமாடும் ஜனக்கூட்டத்தைப்போல அந்த நட்சத்திரங்கள் தோன்றுகின்றன. அது ஒரு புதிய உலகம். அதற்கு ஆதி அந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. பூமியாகிய கிரகத்தில் உள்ள ஜீவராசிகளின் வாழ்க்கை குறுகிய சரித்திரமாகும்; அது முடிவில்லாமல் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

இவை யாவும் படக்காட்சி சாலைகளிலும், பான விடுதிகளிலும் அறியப்படுவதில்லை. ஆனால் ஜனங்கள் அதை உணருகிறார்கள். உலகம்அறிந்திருக்கும் மிகப்பெரிய சக்தி, சிருஷ்டியையும், அதன் சர்வாதிகாரியையும் பற்றிய நம்பிக்கையின் அஸ்திவாரத்தைச்சார்ந்திருந்தது. விஞ்ஞான சாஸ்திரம் அப்பழங்கதை சிதைக்கப்பட்டு விட்டதாக ஒருவாறு கண்டு பிடித்திருக்கிறது. தேவர்களுடைய வம்சம் அழிந்து விட்டது. மனிதன் தன்னுடைய புதிய குடி அரசுக்கும் புதிய ஜன ஆட்சிக்கும் தானே அங்கங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியவனாயிருக்கிறான்.

பழைய மதக் கோட்பாடுகளை ஆட்டிவைத்த புதிய ஞானத்தின் ஒரு பகுதியைக் காட்டக்கூடிய ஒரு உதாரணத்தை இங்கு எடுத்துச் சொல்லுகிறேன். அப்புதிய ஞானம் மிகவும் ஆணித்தரமானது. மிகவும் சாஸ்வதமானது. அது அபிவிருத்தியாகுந் தன்மையது. அது நமது காலத்தில் மிகப்பெரிய காரியமாகும். அதைப் பள்ளிக்கூடங்களில் நுழையாதிருக்கும்படி செய்யச்சிறு முயற்சி செய்தால் அதை ஒதுக்க முடியாது. அது தற்கால மனிதனுடைய மதிப்புக்குரிய ஜெயக்குறியாகும். அதிலிருந்தே அனுபவ விஞ்ஞானம் (சயன்ஸ்) உண்டாயிருக்கிறது- இவை யெல்லாம், உலகத்தின் முகப்பையே மாற்றியிருக்கிறது. (தொடரும்)

## அருப்புக்கோட்டை திமிர் வரியின் கொடுமை சகிக்க முடியவில்லையே.

### சர்க்கார் கவனிக்குமா?

அன்புள்ள தோழர்களே! நம் நகரின் தேவாங்கர் சமூகத்திற்கும், நாடார் சமூகத்திற்கும் சுமார் 4—5 வருஷத்துக்கு முன்பாக தெருவில் நாடார் மக்கள் பஜனை பாடிக்கொண்டு போன விஷயத்தில் தகராறு ஏற்பட்டு அதனால் இரு பக்கத்திலும் சேர்ந்து இரண்டுகொலைகள்நடந்தும், அநேக விதமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டும்இன்னும் தீர்ந்தபாடில்லை.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்தி ஜாதி உயர்வு தாழ்வுக்கொடுமைகளை விளைவித்துக்கொண்டிருக்கும் சத்தற்ற-விவேகமற்ற மக்களை பாரமாக சுமந்து கொண்டிருக்கிறது நம்இந்தியா. இன்று அடிமைத்தன்மையிலிருப்பதற்கும் அதுவேகாரணம். தூரத்திலுள்ளவன் சொல்வதும் கேட்கிறோம். நமக்குள்மனிதனுக்கு மனிதன் சுதந்திரத்தைக்கொடுத்து ஒற்றுமையுடன் வாழமுடியவில்லை என்பதை நாம் யோசனை செய்தால் நமதுஅறியாமைக்கு, வெட்கப்படவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாம்என்றுமனிதனுடைய உரிமைகளைப் பாதுகாக்கிறோமோ அன்றுதான்மனிதத்தன்மையை அடைந்தவர்களாவோம். மனிதத்தன்மையைச்சீக்கிரம்அடைவோமென்று எதிர்பார்க்கிறோம். மனிதர்களைக் கல்வி, அறிவற்றமூடமக்களாக இருத்தி புழுக்கள் போல்நெளித்துக்கொண்டிருக்கும்படி செய்யும்எந்த ஆட்சிஸ்தாபனமும்நீடித்திருக்க நியாய மில்லை என்று சரித்திர அனுபவம் கூறுகிறது.

மூட மக்களை அறிவினாலும், தண்டனையினாலும் தான் சீர்திருத்த முடியுமே ஒழிய மற்ற வழியில் ஒன்றும் முடியாது. பொதுஸ்தாக்களில் மனிதனை மனிதன் நடக்கக்கூடாதென்று கேவலப்படுத்துவது கூடாதென்றும் சமசுதந்தரம், உண்டு என்று ஒரு பக்கம் சர்க்கார் கூறுவதும், மற்றொரு பக்கம் தெருவில், நடந்தால் கலகம் ஏற்படும் என்று 144சட்டம் பிறப்பி விப்பதும் தலைக்கு வாலும்! வாலுக்லுத்தலையுமாக இருந்து கொண்டு மக்களுக்குள் சண்டை யேற் படும்படி செய்வதும், சமாதானத்தைப் பாதுகாப்பதற்குச் சிப்பாய்களுக்கு திமிர் வரி என்று வரி கொடுக்க வேணுமென்றும் நொண்டிச்சமாதானம் கூறி மக்களை இம்சை செய்வதும் என்ன நியாயமாகும்.

திமிர் வரி என்னும் பேரால் ஏழைத்தொழிலாளி மக்களால் தான் அதிக வரி கொடுக்கப்படுகிறது. தொழிலாளிகளால் திமிர் வரி கொடுக்க முடியாமல் வீட்டுக் கதவுநிலைகளும், சாப்பிடுகிற பாத்திரங்களும் நெசவு நெய்கிற சாமன்களும் பறிமுதலாகிறது நேரில் பார்த்தால் அவர்கள் படும்கஷ்டம் சொல்ல முடியாது. கைத்தொழிலில் வயிற்றுக்குப் போதுமான ஆகாரம் கிடைப்பது அரிதாயிருக்கிறது. தொழிலாளிமக்களின் கஷ்டத்தை உணர்ந்து நாடார் சமூகத்தினரும், தேவரங்கசமூகத்தினரும் ஒற்றுமையுடன் கையெழுத்திட்டு, "சர்க்காரால் தீர்ப்புச்செய்கிறபடியும், வியாபாரம் தொழில் வகையறுக்களிலெல்லாம்ஒற்றுமையாகவும் சமாதானமாகவுமிருந்து வருகிறோம். எங்களால் திமிர்வரி கொடுக்க முடியவில்லை. ஆதலால் அதை ரத்து செய்துவிடவேண்டு"மென்று கலெக்டர் அவர்களுக்கும், ஜில்லா சூப்ரெண்டாரவர்களுக்கும் முக்கியஸ்தர்கள் இருதறப்பிலும் கையொப்பமிட்டு விண்ணப்பம் செய்தார்கள். ஸ்தல அதிகாரி இடமும் தெரியப்படுத்தியும்ஏழைத்தொழிலாளி மக்களிடம் கொஞ்சம் கூட தயை நியாயம் காட்டாமல், சிவில் விவகாரம் முடியும் வரை திமிர்வரி போடப்படுமென்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்தது மிகவும் வருந்தத்தக்கது. சிவில் விவகாரம்முடிய 10 வருஷம் ஆகும். அது வரை திமிர்வரி போடப்படுவதென்று கூறுவது ஏழைகளுக்கு எவ்வளவு கஷ்டம்? சர்க்காரே ஏழை ஜனங்களைக் கொடுமைசெய்தால்வேறுயாரிடம் முறையிடுவது?

ரிசர்வு படையினால் தான்ஒடுக்கிச் சண்டை இல்லாமல் வைத்திருக்க முடியுமென்று கூறுவது பொருத்தமல்ல. நிலைமையை, உணர்ந்து தங்களைப்பாதுகாத்துக்கொள்வது மக்கள் சுபாவம். தலத்தில் பொறுப்புள்ள அதிகாரிகளிருந்தும் இரண்டு கொலைகளும் முன்பின் நடந்தது. அந்தச் சமயம் மக்கள் ஆத்திரத்தை அடக்க முடியாமல் போய்விட்டது. என்றுலும் அக்கிரமங்கள் செய்தவர்களை தண்டித்து அதன் மூலம் மற்றவர்களுக்கும் அறிவூட்டுவது தான் நியாயமாகும். அதை விட்டு நிரபராதிகளை எல்லாம் போக்கிரிகள் என்று திமிர்வரிபோடுவது அறிவிற்கும் நியாயத்திற்கும் சரிஇல்லைஎன்றும், ஏழைகளை வரியின் மூலம் நசுக்கக்கூடாது என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறதென ஒரு நிருபர்எழுதுகிறார்.

குறிப்பு:—இதை கவனித்து அந்த ஜில்லா சட்ட சபை மெம்பர்கள் பரிகாரம் செய்து கொடுக்கவேண்டியது அவர்களது கடமையாகும்.

ப—ர்

## முனிசிபல் சேர்மன் தேர்தல்கள்.

### வேலூர்.

இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 12-11-34ந் தேதி மாலை 4-45 மணிக்கு இவ்வூர் டிவிஷனலாபீசர் தலைமையில் நடைபெற்றது. பெரும்பான்மையான ஓட்டுகளால் தோழர் வி. எம். ராமசாமி முதலியார் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பின் நடந்த வைஸ் சேர்மன் தேர்தலில் தோழர் ஆர். ரெங்கைய செட்டியார் அதிக ஓட்டுகளால் வைஸ் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

### விருதுநகர்.

இவ்வூர் முனிசிபல் கௌன்சிலரான ராவ்பஹதூர் எம். எஸ். பி. செந்திக்குமாறு அவர்கள் 12-11-34ந் தேதி தமது நந்தவனத்தில் நகரசபை பழைய அங்கத்தினர்களுக்கும், புதிய அங்கத்தினர்களுக்கும் ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தினர். பின் அவ்விடத்திலேயே முனிசிபல்சேர்மன் தேர்தல்நடைபெற்றது.அதில் பழைய சேர்மன்தோழர் வி. வி. இராமசாமி அவர்களே போட்டியின்றி சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பழைய வைஸ் சேர்மன் தோழர் எம். எஸ். பி. எஸ். பெரியசாமி அவர்களே போட்டியின்றி வைஸ் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

### கோவை.

இவ்வூர் முனிசிபல் சேர்மன் தேர்தல் 12-11-34ந் தேதி நடைபெற்றது. அதில் தோழர் எஸ். என். பொன்னைய கவுடர் அவர்கள் போட்டியின்றி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வைஸ் சேர்மன் தேர்தல் 22-11-34ந் தேதி நடைபெறும். அதில் தோழர் எம். பரமேஸ். வரஞ் செட்டியார் அவர்களே ஏகமனதாக வைஸ்சேர்மனாக தேர்ந்தெடுக்கப்படுவாரெனத் தெரிகிறது.

### திருவாரூர்.

இவ்வூர் முனிசிபாலிட்டியின் புதிய அங்கத்தினர்கள் கூட்டம் 13-11-34ந் தேதி நடைபெற்றது. அதில் வடபாதி மங்கலம் எஸ்டேட் தோழர் ஜி. ராமானுஜ முதலியார் அவர்கள் போட்டியின்றி சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### நாகை.

இவ்வூர் முனிசிபாலிட்டியின் முதல் கூட்டம் 12-11-34ந் தேதி நடைபெற்றது. அதில் வி. பி. கே. காயாரோகணம் பிள்ளை போட்டியின்றி சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### கும்பகோணம்.

இவ்வூர் முனிசிபாலிட்டியின் முதல் கூட்டம் 12-11-34ந் தேதி நடைபெற்றது. அதில் டாக்டர் சாம்பசிவய்யர் பெரும்பான்மையான ஓட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பெர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

### மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

### கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின்தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணா 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன!

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்!

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்கவலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணா 4

### குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடி அரசில்எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணா 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி செனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணா 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 3.

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணா 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணா 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணா 5.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணா 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்**
**லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷ்ய பொதுவுடைமைக் கொள்கைவீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். எ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணா $\frac{1}{2}$.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா $\frac{1}{2}$.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.